விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 051 வள்ளுவர் ஆண்டு 2055 தை 25 வியாழக்கிழமை (08.02.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# மாகாண சபைகளுக்கு மேலும் அதிகாரங்கள் வழங்குவோம்

## கொள்கைப் பிரகடன உரையில் ஜனாதிபதி



(கொழும்பு)

- பொருளாதார நெருக்கடிகளுக்கு அரசியல் தீர்வு வழங்கப்படாது என ரணில் தெரிவிப்பு.
- அரசியல் தீர்வு எனக் கூறி சில அரசியல் குழுக்கள் பிரசித்தமடைய முயற்சிப்பதாக ஜனாதிபதி தெரிவிப்பு.
- நாட்டின் நலனுக்காக பொதுவான ஒருமித்த கருத்துடன் இணையுமாறு அழைப்பு.

(02ஆம் பக்கம் பார்க்க)

## 20 கிலோ அரிசி
### குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு

(கொழும்பு)

குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு நிவாரணமாக பண்டிகைக் காலத்தில் ஒரு குடும்பத்திற்கு இருபது கிலோ அரிசி வழங்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் ஆற்றிய கொள்கைப் பிரகடன உரையிலேயே இவ்வாறு தெரிவித்தார். 15

## ஜனாதிபதியின் ஆசீர்வாதத்துடனே அநுர இந்தியா சென்றுள்ளார்
### நீதியமைச்சர் விஜயதாஸ



(கொழும்பு)

ஜனாதிபதியின் முழுமையான ஆசீர்வாதத்துடன் தான் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க இந்தியாவுக்குச் சென்றுள்ளார். இந்திய எதிர்ப்பு கொள்கையிலிருந்து விடுபட்டுள்ளமை வரவேற்கத் தக்கது என நீதி, 15

## அகதிகளாக தமிழகத்தில் ஐவர் தஞ்சம்

(வவுனியா)

நாட்டில் ஏற்பட்டுள்ள கடுமையான பொருளாதார நெருக்கடி காரணமாக வவுனியாவில் வசித்த ஒரே குடும்பத்தை சேர்ந்த மேலும் 5 பேர் அகதிகளாக தமிழ் நாட்டின் தனுஸ் 15

## பாராளுமன்ற அமர்வை புறக்கணித்த எதிர்க்கட்சியினர்

(கொழும்பு)

9ஆவது பாராளுமன்றத்தின் ஐந்தாவது கூட்டத் தொடரை எதிர்க்கட்சியினர் புறக்கணித்துள்ளனர்.

ஜனாதிபதி நேற்று முற்பகல் பாராளுமன்ற கூட்டத் தொடரை ஆரம்பித்து உரையாற்றத் தொடங்கிய சந்தர்ப்பத்தில், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஷ உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் சிலர் சபையில் இருந்து வெளிநடப்பு செய்தனர்.

அண்மைக்காலமாக அரசாங்கம் மேற்கொண்ட சில நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், இந்த நடவடிக்கையை மேற்கொண்டதாக எதிர்க் 15

## நிஷாந்தவின் மரணத்தில் சந்தேகம்
### சி.ஐ.டியில் முறைப்பாடு

(கொழும்பு)

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் மரணத்துக்கு காரணமாக அமைந்த வீதி விபத்து தொடர்பில் சந்தேகம் நிலவுவதாகவும் அது 15

## மின்னொழுக்கினால் தும்புத் தொழிற்சாலை எரிந்து நாசமானது
### கிளிநொச்சியில் சம்பவம்



(கிளிநொச்சி)

மின்னொழுக்கு காரணமாக தும்புத் தொழிற்சாலை ஒன்று எரிந்து நாசமாகியுள்ளது. 15

## சிவில் உடையில் பேருந்துகளில் பொலிஸார்

(கொழும்பு)

பொதுப் போக்குவரத்து சேவைகளில் பெண்களிடம் தகாத முறையில் நடந்து கொள்பவர்களுக்கு எதிராக விசேட வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த விசேட நடவடிக்கை நேற்று 15

## மின்சார சபை ஊழியர்கள் கொழும்பில் போராட்டம்



16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு
## வருடாந்த பொதுக்கூட்டம் - 2024

மேற்படி பொதுக்கூட்டம் எதிர்வரும் 25.02.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு தொண்டைமானாறு நிலையத்தில் நடைபெறும் அங்கத்தவர்கள் பிரேரணைகள் இருப்பின் 23.02.2024 இற்கு முன்னர் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

உப தலைவர்,
வெளிக்கள நிலைய அலுவலகம்,
இல.133, செம்மணி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(18924)


லங்கா மஹறாஸ்(PVT) LTD
உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை



லண்டன் - 925/=
பிரான்ஸ்.- 1790/=
ஜேர்மனி - 1690/=
கனடா - 2150/=
சுவிஸ் - 1990/=
இந்தியா - 990/=
இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை.
(18918)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்துதரப்படும்.
இந்தியா தொடர்புகளுக்கு :
0091956156719
WU MoneyGram. Ria
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பு.
077 8393 974


## மாகாண சபைகளுக்கு...

ஒன்பதாவது பாராளுமன்றத்தில் ஐந்தாவது கூட்டத்தொடர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நேற்று வைபவ ரீதியாக காலை ஆரம்பமானது.

இதன்போது, அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்தை முன் வைத்து உரையாற்றியபோதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாட்டில் உள்ள அனைத்து பாதுகாப்பு வலையமைப்புக்களையும் நவீனமயப்படுத்த தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஒன்பது மாகாணங்களினதும் பொருளாதாரத்தைப் பலப்படுத்த அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

யாழ்ப்பாணம், திருகோணமலை, பிங்கிரிய, அம்பாந்தோட்டை, கண்டி உள்ளிட்ட நகரங்களிலும் எமது பொருளாதாரத்தை விரிவுபடுத்துவதற்கான வேலைத் திட்டத்தை நாங்கள் நடை முறைப் படுத்துகிறோம்.

தற்போதும் இந்தியாவுடன் இணைந்து திருகோணமலையை பொருளாதார மையமாக அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளோம். அரசியலமைப்பில் மாகாண சபை அதிகாரங்களின் மூன்றாவது அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மாகாண சபைகளுக்கு சில அதிகாரங்களை உரிய வகையில் வழங்குவோம்.

பொருளாதார நெருக்கடிக்கு அரசியல்தீர்வுகள் இல்லை. பொருளாதார ரீதியான தீர்வே உள்ளது. அறிவியல் தீர்வை தேட வேண்டும்.

அதனைவிடுத்து சில அரசியல் குழுக்கள் பழைய அரசியல் தீர்வுகளை கூறி பிரசித்தமடைய முயற்சிப்பது கவலைக்குரியதாகும்.

பொருளாதார மாற்றச் சட்டம் விரைவில் பாராளுமன்றில் சமர்பிக்கப் படும். அதற்குரிய புதிய நிறுவனத்தையும் உருவாக்க வேண்டும் என்றார்.
(ம-7)

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
14 - 06 - 1939

மறைவு
20 - 01 - 2023




அமரர்
### சிவசம்பு வன்னியசேகரம்
திதி : 08.02.2024

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வானுறையும் தெய்வமானீர்
ஆயாக்கடவை சித்திவிநாயகனின்
பாதார விந்தங்களில் ஆன்மா சாந்திபெற
பிரார்த்திக்கும்

புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
சுன்னாகம்.

அன்பு மனைவியும்
அன்பு உள்ளங்களும்
(18932)

## 25 ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
### கிருஷ்ணபிள்ளை ராஜ்குமார் (B.AF)

தாய் மடியில் 31.03.1969
அரண் அடியில் 08.02.1999


அன்னாரது ஆத்மா சாந்தி பெறுவதாக.

குடும்பத்தினர்

கரவெட்டி மேற்கு,
கரவெட்டி.
021 226 1312
(C-8298)

## மரண அறிவித்தல்

தோற்றம்
04 - 01 - 1947



மறைவு
07 - 02 - 2024

### ஆழ்வார் பொன்னையா
(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர், J.P)

கரவெட்டி தெற்கு கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆழ்வார் பொன்னையா நேற்று (07.02.2024) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆழ்வார் - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சிதம்பரம் - தங்கம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும் காலஞ்சென்ற நாமகள் (யோகம்) அவர்களின் அன்புக் கணவரும் திலகவதியின் பாசமிகு அண்ணாவும் யோகராசா, யோகநாதன், ராதா, ஆகியோரின் மைத்துனரும் கமலேஸ்வரன் (ஜேர்மன்), நகுலேஸ்வரன் (நீர்கொழும்பு), நிலாணியின் அன்புத் தந்தையாரும் பகீரதி (ஜேர்மன்), தாட்சினி (நீர்கொழும்பு), ஜொனிற்றன் (சிரேஷ்ட விரிவுரையாளர்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் மீனுஜா, மெல்வின், தேனுஜா, யஷ்வின், தர்வின், அயுஸ்மன், கஷ்மிரா ஆகியோரின் அன்புத் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.02.2024) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 2.00 மணியளவில் சோனப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

கரவெட்டி தெற்கு,
கரவெட்டி.
(C-8303)

தகவல்: குடும்பத்தினர்
தொ.பே : 077 976 5068

## மரண அறிவித்தல்

தோற்றம்
1951 - 01 - 12



மறைவு
2024 - 02 - 07

### ஆழ்வாப்பிள்ளை பாலச்சந்திரன்
(உரிமையாளர் வாணி நகை மாளிகை, பருத்தித்துறை)

வியாபாரிமூலையைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட ஆழ்வாப்பிள்ளை பாலச்சந்திரன் அவர்கள் நேற்று (07.02.2024) புதன்கிழமை காலமானார்.

அன்னார் ஆழ்வாப்பிள்ளை - அழகம்மா தம்பதியரின் அன்பு மகனும் மீனாம்பிகையின்(கமலா) அன்புக் கணவரும் ராமலிங்கம், சிவலிங்கம், செல்வரட்ணம், செல்வவிநாயகம், பூமணி, சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் யசோ, மீரா, பால்ராஜ், றூபன், கலைவாணி, ஆனந் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.02.2024) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 3.00 மணியளவில் சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

1 ஆம் கட்டை சந்தி,
[illegible] வீதி,
பருத்தித்துறை.
(18935)

தகவல் :
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்கள் மத்தியில் வன்முறை சம்பவங்கள் அதிகரிப்பு

## உளவியல் மருத்துவர் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**பாடசாலை மாணவர்கள் மத்தியில் வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக காலி கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் உளவியல் மருத்துவர் ரூமி ரூபன் தெரிவித்துள்ளார்.**

தரம் ஆறு முதல் அதற்கு மேற்பட்ட தரங்களில் கற்கும் மாணவர்கள் மத்தியில் இவ்வாறு மோதல்கள், வன்முறைகள் அதிகரித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சமூக ஊடகங்கள், திரைப்படங்கள் போன்றவற்றில் காண்பிக்கப்படும் வன்முறைகள், சண்டைகள், துப்பாக்கிச்சூடுகள், பழிவாங்குதல்கள் உள்ளிட்ட காட்சிகளை பார்வையிடுதல் மற்றும் வீடியோ கேம்கள் மூலமாக மாணவர்களின் நடத்தையில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தற்பொழுது தரம் ஆறு மற்றும் அதற்கு மேற்பட்ட வகுப்புக்களில் கற்கும் மாணவர்கள் பெற்றோரின் சொல்லை கேட்பதில்லை எனவும் மிகவும் கோபமாக நடந்து கொள்வதாகவும் அவர்களிடம் அலைபேசிகளை வழங்க வேண்டாம் எனவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

சமூக ஊடகங்களில் வன்முறைக் காட்சிகளை பார்வையிடுவதன் மூலமும் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படுகின்றது.

பிள்ளைகள் தொடர்பில் பெற்றோர் கூடுதல் கவனம் செலுத்த வேண்டுமென அவர் வலியுறுத்தினார். (நி-5-6)

# கரிநாள் போராட்டத்தின் போது தாக்கப்பட்ட போராட்டக்காரர்கள்

## நடவடிக்கை எடுக்குமாறு நாடு கடந்த தமிழீழ அரசு ஐ.நாவிடம் கோரிக்கை

(லண்டன்)

சுதந்திரதின போராட்டத்தின் போது, தமிழர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு ஐக்கிய நாடுகள் அமைப்பிடம் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்ரகுமாரன் கோரிக்கை முன்வைத்துள்ளார்.

கடந்த 4 ஆம் திகதி இலங்கையின் சுதந்திர தினத்தை முன்னிட்டு தமிழர் தாயகப்பகுதிகளில் கரிநாள் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த போராட்டத்தில், தமிழர்களின் மீது அரசாங்கம் அடக்குமுறைக்கு உட்படுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளதுடன் போராட்டத்தை அடக்கி, தாக்குதல் நடத்தியவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் வோல்கர் டர்க்கிடம் இந்த கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் இலங்கை தொடர்பான வாய்மொழி மூல அறிக்கை சமர்ப்பிக்கப்பட உள்ள நிலையில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

எனவே, இவ்வாறான தாக்குதல்கள் அடக்குமுறைகளை தடுக்கவும் தாக்குதல் மேற்கொண்டவர்களை தண்டிக்கவும் ஐக்கிய நாடுகள் அமைப்பு நடவடிக்கை எடுக்க வேண்டுமென நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் கோரிக்கையை முன்வைத்துள்ளது. (நி-5-6)

# இந்திய அரசால் வழங்கப்படும் புலமைப்பரிசில்கள்-2024/25

(கொழும்பு)

2024/25 கல்வி ஆண்டுக்காக இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்படும் இளமாணிப் பட்டப்படிப்பு மற்றும் பட்டப்பின் படிப்பு புலமைப்பரிசில்களை வழங்குவதற்கு தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரர்களின் விண்ணப்படிவங்கள் எதிர்வரும் 2024.02.05 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

இணையவழி விண்ணப்பப்படிவம் மற்றும் மேலதிக விபரங்களுக்கு www.mohe.gov.lk அல்லது www.moe.gov.lk எனும் அமைச்சரின் இணையத் தளம் ஊடாக பெற்றுக்கொள்ள முடியும் என கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். (நி-5-6)

| புலமைப்பரிசில் திட்டம் | விடயத்துறை | புலமை பரிசில்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| நேரு ஞாபகார்த்த புலமைப்பரிசில் திட்டம் | இளமாணிப் பட்டம் | 50 |
| ராஜீவ் காந்தி புலமைப்பரிசில் திட்டம் | இளமாணிப் பட்டம் | 10 |
| மௌலானா அசாட் புலமைப்பரிசில் திட்டம் | முதுகலைமாணி / விஞ்ஞான முதுமாணி (Masters) | 40 |
| நேரு ஞாபகார்த்த புலமைப்பரிசில் திட்டம் | முதுகலைமாணி / விஞ்ஞான முதுமாணி (Masters) | 20 |
| நேரு ஞாபகார்த்த புலமைப்பரிசில் திட்டம் | கலாநிதிப் பட்டம் (PhD) | 10 |
| கலாநிதி ஏ.பீ.ஜே.அப்துல் கலாம் பொதுநலவாய அமைப்பின் புலமைப்பரிசில் திட்டம் | கலாநிதிப் பட்டம் (PhD) | 05 |

# கண்பரிசோதனை முகாம்

(யாழ்ப்பாணம்)

கண்புரை சத்திரச்சிகிச்சை செய்ய வேண்டிய நோயாளர்களைப் பரிசோதனை செய்து தெரிவு செய்யும் கண்பரிசோதனை முகாம் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் தெல்லிப்பளை மருத்துவமனையில் நடைபெறவுள்ளது. இதில் தெரிவுசெய்யப்படும் நோயாளர்களுக்கான கண்புரை சத்திரசிகிச்சை யாழ்.போதனா மருத்துமனையில் முற்றிலும் இலவசமாக செய்யப்படும் என யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி.ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (நி-5-6)



## வீடு வாடகைக்கு

சுன்னாகம் ஸ்ரேசன் றோட்டில் பொலிஸ் ஸ்ரேசனுக்கு எதிராக வீதியிலிருந்து நேரடிப்பாதையுடன் 90m தொலைவிலுள்ள (6) ஆறு அறைகளும் கூடங்களும் குசினியும் கொண்ட வீடு ஒன்று வாடகைக்கு உண்டு. கல்வி, வியாபார, அலுவலக தேவைகளுக்கு உகந்தது.

தொடர்பு:- 077 108 3363

(18922)

## சேவை நலன் பாராட்டும் மணிவிழாவும்



Congratulations

திருவாளர். நடராசா மகேந்திரன்

(B.Sc, M.Ed, SLTS-I)

சேவை விபரம்

ஆசிரியர்

யா/கப்புது ஏகாம்பர வித்தியாலயம் - 15.07.1996-01.03.2002
யா/அளவெட்டி அருணாச்சலம் வித்தியாலயம் - 02.03.2002-18.01.2006
யா/கட்டுவன் புலம் மகா வித்தியாலயம் - 19.01.2006-14.03.2012
மு/உடையார்கட்டு மகா வித்தியாலயம் - 15.03.2012-21.10.2012
மு/வேணாவில் சிறி முருகானந்த வித்தியாலயம் - 22.10.2012-09.01.2014
யா/வயாவிளான் மத்திய கல்லூரி - 10.01.2014-16.08.2021
யா/உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம் - 17.08.2021-13.06.2023
(பிரதி அதிபர்)
யா/உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம் - 14.06.2023-07.02.2024

இருபத்தாறு வருடங்கள் ஆசிரியப் பணியாற்றி இன்று தம் சேவையினின்றும் ஓய்வுபெறும் இவ்வேளையில் எம் மாணவர்களுக்கு கணிதத்தினை திறம்படப் போதித்தும் பிரதியதிபராக இருந்து நிர்வாக கடமைகளில் பணியாற்றியும் பாடசாலை முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருந்து உதவியமைக்கும் பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவிக்கும் இவ்வேளை அவர்தம் ஓய்வுக்காலம் நலமும் வளமும் பெற்று சிறப்போடு வாழ வாழ்த்துகிறோம்.

(18910)

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு. பெனடிக்ட் ஜெப்றி நிரேசன்
B.Ed (விஞ்ஞானம்)



திரு. நாகராசா மதியழகன்
B.Ed (உடற்கல்வி)

Best Wishes



ராஜிவ் ஜெசிந்தா
B.Ed (ஆரம்பக்கல்வி)

கடந்த 31.01.2024 அன்று கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் எமது பாடசாலை ஆசிரியர்களான திரு.பெனடிக்ட் ஜெப்றி நிரேசன், திரு.நாகராசா மதியழகன், திருமதி.ராஜிவ் ஜெசிந்தா ஆகியோர் கல்விமாணி (B.Ed) பட்டத்தை பெற்றுக் கொண்டதையிட்டு மகிழ்ச்சியடைவதுடன் எங்களது மனமார்ந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(18925)

வாழ்த்துவோர்:- ஆசிரியர் நலன்புரிச்சங்கம், யா/வைத்தீஸ்வராக் கல்லூரி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கீரிமலை சிவானந்தாவை வீழ்த்தி இளவாலை சென்லூட்ஸ் இறுதி ஆட்டத்திற்கு தகுதி



வடமாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்க உதைபந்தாட்ட தொடரில் இளவாலை சென்லூட்ஸ் அணி இறுதி யாட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளது. வடமாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கம் வலிகாமம் உதை பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட இவ் வருடத்தின் முதலாவது மாகாண தொடர் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதா னத்தில் நடைபெற்று வருகின்ற இந்நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் இளவாலை சென்லூட்ஸ் அணியை எதிர்த்து கீரி மலை சிவானந்தா அணி மோதியது.

ஆட்டம் ஆரம்பமாகி இரு நிமிடங் களில் இளவாலை சென்லூட்ஸ் அணி வீரர் முறையற்ற ஆட்டத்தை வெளிப் படுத்த சிவானந்தா அணிக்கு தண் டனை உதை கிடைத்தது. இதனை அவ்வணி வீரர் லக்சன் சரியாக பயன் படுத்தி தனது அணிக்கான முதலாவது கோலைப் பதிவு செய்தார். ஆனால் தமது நிதானமான ஆட்டத்தை வெளிப் படுத்திய இளவாலை சென்லூட்ஸ் அணி வீரர்கள் கிதியன் மற்றும் ரமேஸ் ஆகியோர் ஒவ்வொரு கோல்களை பதிவு செய்ய முதல் பாதியாட்டத்தில் சென் லூட்ஸ் அணி 2:1 என்ற கோல் கணக் கில் முன்னிலை வகித்தது.

இரண்டாவது பாதியாட்டத்தில் ஆட்டத் தில் ஆதிக்கம் செலுத்திய சென்லூட்ஸ் அணி வீரர்கள் கிதியன், றோனிஸ்ரன், பசில் ஆகியோர் ஒவ்வொரு கோல் களை பதிவு செய்ய, கீரிமலை சிவானந்தா அணி வீரர் லக்சன் ஒரு கோலைப் பதிவு செய்ய ஆட்டநேர முடிவில் சென் லூட்ஸ் அணி 5:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதி சுற்றுக்கு தகுதி பெற்றுள் ளது. (நி-5-6-90)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3034

### ரிஷிகா

இருக்கிறத வைச்சிட்ட சந்தோசமா இருக்கனும்னு அட்வைஸ் பண்றாங்க!



நம்ம கிட்ட இருக்கிறது பிரச்சினை மட்டும்தான்... அத வச்சிட்டு எப்படி சந்தோசமா இருக்கிறது?

### கயல்

கண்ணு கோளாறுனு சொன்னியே கண் டாக்டர போய் பாத்தியா?? அவருக்கு நானே பறவால... ஏன்டா??



கண்ணு தெரியலன்னு போனா அவரு torch அடிச்சு என் கண்ண பாக்கிறாரு...

### கைலினி

**கணவன் மனைவி**

குடும்பத்தில் கணவன் தலை என்றால் மனைவி கழுத்து...

தலை எங்கு திரும்ப வேண்டும் என்று கழுத்து மனசு வைச்சா தான் முடியும்...

### குரு

மனைவி: நேற்று மூக்குப்பிடிக்க சாப்பிட்டீங்களே, அதே சாம்பார்தான் இன்னைக்கும்...



கணவன்: சரி, இன்னைக்கு மூக்கைப் பிச்சுக்கிட்டு சாப்பிடுறேன்...

### விமல்



குணம் இருக்கிறவன எல்லாம் குப்பையில தள்ளிட்டு...



பணம் இருக்கிறவன பல்லக்கு தூக்குற காலம் சார் இது..!

### துவா

வீட்டுச் சாப்பாடு தின்னுறவனுக்கு கடையில சாப்பிடனும்னு ஆசை
கடையில தின்னுறவனுக்கு வீட்டுச் சாப்பாடு சாப்பிடனும்னு ஆசை



சாப்பாடே கிடைக்காதவனுக்கு எதையாவது சாப்பிட்டா போதும்னு ஆசை... அவ்வளவு தான் வாழ்க்கை

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் -13, அராலி வீதி 2 ஆம் குறுக்குத்தெரு, 40 ஆதன இலக்கத்தை கொண்ட ஆதனம் சொந்தக்காரர் என்ற பெயரில் யாழ். மாநகரசபை ஆதனப்பதிவேட்டில் காணப்படுகின்றது.

இதன் கீழ் அட்டவணையில் நன்கு விபரிக்கப்படும் ஆதனத்தை மீரான் மொகைடீன் கைம்பெண் ஜமீலா 24.09.1983 திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு தம்பித்துரை சண்முகராஜா முகதாவில் 2313 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய Administratrix conveyance உறுதி மூலம் தெரியப்படுத்தியுள்ளார். பின்னர் குறித்த ஆதனத்தை மீரான் மொகைதீன் மொகமட் சகீர் 18.06.2013 திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு தாகா மொகமட் லபீர் முகதாவில் 3145 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் மீரான் மொகைதீன் மொகமட் அமீன் நன்கொடையாக வழங்கியுள்ளார். பின்னர் குறித்த ஆதனத்தை மீரான் மொகைதீன் மொகமட் அமீன் 24.06.2012 திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு தாகா மொகமட் லபீர் முகதாவில் 3146 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதிமூலம் சாகுல் ஹமீட் மொகமட் ரகுமான் வழங்கியுள்ளார்.

பின்னர் குறித்த ஆதனத்தை சாகுல் ஹமீட் மொகமட் ரகுமான் 05.08.2016 திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு முடியப்பு றெமிடீஸ் முகதாவில் 1376 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் மொகமட் தாப்தீன் மொகமட் சித்திக் என்பவரிற்கு அறுதியாக வழங்கியுள்ளார்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப் பகுதி, வண்ணார் பண்ணை, கோவிற்பற்று, வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை பிரதேச செயலகம், யாழ்ப்பாணம் மாநகர சபை, **J/87** கிராம அலுவலர் பிரிவு "உப்புக்குளம் கரையும் பம்மை வெளியும்" நில.பர நான்கு (04). இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் கே.பரமேஸ்வரன் அவர்களால் 2016.08.06 ஆம் திகதி 930**A/2012** இலக்கத்தில் அளந்து வரைந்த படத்தில் 1-4 துண்டுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. இதில் துண்டு இரண்டு எனக்காட்டப்பட்ட நெற்பரபரப்பு (1) ஒன்று இது மீண்டும் இதே நில அளவையாளர் இதே திகதியில் 930**B/2012** ஆம் இலக்கத்தில் அளந்து வரைந்த படத்தில் **"துண்டு 01"** எனக்காட்டப்பட்டுள்ளது.

இதற்கு எல்லைகள்:-

கிழக்கு - 2 ஆம் குறுக்குத்தெரு
வடக்கு - குறித்த 930**A/2012** ஆம் இலக்கப்படத்தில் துண்டு 1 எனக்காட்டப்பட்ட பகுதி
மேற்கு -மாயானம்.
தெற்கு -குறித்த 930**A/2012** ஆம் இலக்கப்படத்தில் துண்டு 03 எனக்காட்டப்பட்ட பகுதி இதடங்கலும், இதிலுள்ள கிணறும் இதற்குச் சேர்ந்தவைகளும்.

தற்போது மொகமட் தாப்தீன் மொகமட் சித்திக் இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ் ஆதனத்தின் ஏதேனும் ஒரு பகுதிக்கு/முழுமையாகவோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது மொகமட் தாப்தீன் மொகமட் சித்திக் என்னும் பெயர்களிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இவ் ஆதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**ஆணையாளர்,**
**மாநகரசபை, யாழ்ப்பாணம்.** (C-8292)

# தேவை

யாழ்.நகரில் அமைந்துள்ள கருவாட்டுக் கடை ஒன்றிற்கு பெண் காசாளர் தேவை.

**தொடர்புகளுக்கு**

**077 222 8312**

(18923)

## சஜித்துடன் கைகோர்த்த முன்னாள் தளபதி

(கொழும்பு)


முன்னாள் கடற்படைத் தளபதியும் பாதுகாப்புப் படைகளின் தலைவருமான தயா சந்தகிரி ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்துள்ளார். கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸவைச் சந்தித்து அங்கத்துவத்தைப் பெற்றுக் கொண்டார்.

கட்சியின் கடல் மற்றும் கடற்படைக் கொள்கைகளுக்கான ஆலோசகராக அவர் நியமிக்கப்பட்டுள்ளார். தயா சந்தகிரி பாதுகாப்புப் படைகளின் தலைமை அதிகாரியாகவும் பணியாற்றியுள்ளார். ( நி-5-6)

# மரண அறிவித்தல்

## திருமதி. வேலாயுதம் மங்கையற்கரசி

**பிறப்பு-1937.09.11 இறப்பு-2024.02.06**



மயிலினி வடக்கு, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் மாம்பிராய் வீதி, காங்கேசன்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதம் மங்கையற்கரசி இறைபாதம் அடைந்து விட்டார். அன்னார் முத்தர் தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் புத்திரியும் சாந்தா, சறோ, ஜீவா, சாந்தினி, சுந்தர், கௌசலா, சங்கர் ஆகியோரின் அன்புத் தாயாரும் அல்பிறெட், குணராசா, சந்திரசேகரம், காலஞ்சென்ற இராசரத்தினம், மகிழினி, நடராசசுந்தரம், லதா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் நிசாந்தன் சாயினி நிமலகாந்தன் தீபகலா, அஞ்சனா தயான், மிதுனா லெஸ் பிராங்ளின், லயன்ராஜ் மோகனா, துஷ்யந்தன் பாமினி, வேணுகா, பஜீந்தன் பாணுப்பிரியா, இதீஸ்வரன் டிலக்ஷா, கேசவன் லக்ஷா, உமாராஜீ சுதாகரன், பாலஜீவன் ஜெயவாணி, அஜந்தன் சுதர்சி, மதன்ராஜ், றெனோஜினி கோகுலன், டிவேக்கா ஆகியோரின் பாசமிகு பாட்டியும் நிருக்ஷா, ஆன்லியா, மொனிஷா, மெல்வின், ஒரினா, அனனிகா, தஷ்விகா, ரஷ்மிகா, தர்மிகன், கிருஷ்ணா, ராம், பவன், சாருகாஷன், சஸ்வயன் ஆகியோரின் பூட்டியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 08.02.2024 இன்று முற்பகல் 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று தகனக்கிரியைக்காக காங்கேசன்துறை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரிற்கும் அறியத் தருகின்றோம்.

**மாம்பிராய் வீதி,**
**காங்கேசன்துறை.** (C-8299)

**தகவல்**
**குடும்பத்தினர்.**

# இராசிபலன்

**08.02.2024**
**தை 25, வியாழக்கிழமை**
**திரயோதசி முற்பகல் 9.51 மணிவரை**

**உத்தராடம் பின்னிரவு 1.53 மணி வரை**
**சுபநேரம் -8.05-9.35 மணிவரை**
**இராகுகாலம்-2.05-3.35 மணிவரை**

**சந்திராஷ்டமம்**
**ரோகிணி, மிருகசீரிடம்**

**வளவன்**


மேஷம்

கனவுப் பலிதமுண்டு, எடுத்த காரியங்களில் அதீத பிரயாசை காட்டுவீர்கள், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.


கடகம்

வராத உறவினர்கள் உங்கள் வீடுகளுக்கு திடீரென வரும் வாய்ப்புண்டு, ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், காரிய அனுகூலமுண்டு.


துலாம்

வீட்டை சீரமைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், பெற்றோர் வழியில் பிரியம் கூடும், வருமானம் வரும் வழியினைக் கண்டு கொள்வீர்கள்.


மகரம்

வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள், வருமானத்தை அதிகரிக்கும் வழியில் நாட்டம் காட்டுவீர்கள், பெரியோர்களின் உதவியால் சில நன்மைகள் இடம்பெறலாம்.


ரிஷபம்

அதிகம் செலவாகுமென நினைத்த காரியம் நல்லவிதமாக அமையும், மனக்குழப்பம் அகன்று மதிப்பும் மரியாதையும் உயரும், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.


சிம்மம்

ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணும் நாள், போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காணும் நாள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு.


விருச்சிகம்

அலைச்சல்கள் குறைந்து ஆதாயம் கிடைக்கும் வாய்ப்புண்டு, உறவினர்களும் நண்பர்களும் உதவிக்கரம் நீட்டுவர், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.


கும்பம்

ஆதாயம் இல்லாத அலைச்சல்கள் இடம்பெறலாம், சுபகாரியச் செலவுகள் கூடும், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.


மிதுனம்

மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, முயற்சிகளில் தாமதம் ஏற்படலாம்.


கன்னி

தொழிலை விரிபுபடுத்தும் எண்ணம் உருவாகும், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், உதிரிவருமானங்கள் வந்து சேரலாம்.


தனுசு

நீண்டநாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும், பாக்கிகள் வசூலாகும் வாய்ப்புண்டு, செயற்பாடுகளில் ஆர்வம் கூடும்.


மீனம்

அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக முடியும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்த்[illegible] ...லிருந்து விடுபட ஒரே வழி.

# இந்தியப் பிரதமர் மோடிக்கு இராமாயணத்தை எடுத்துரைத்த இ.ஜெயராஜ்

## கம்பவாரிதியின் கேள்வி-பதிலிலிருந்து...

**கேள்வி:-**

என்ன? பாரதப் பிரதமரையே சந்தித்து விட்டீர்கள் போல? எப்படி அந்தச் சந்தர்ப்பம் கிடைத்தது? மோடி எப்படி இருந்தார்? அந்த அனுபவங்களை எங்களோடு பகிர்ந்து கொள்ளலாமே?

**பதில் :-**

திருவாசகத்தில் 'தாயே ஆகி வளர்த்தனை போற்றி' என்று ஒரு அடி வருகிறது. அந்த அடி எத்தனை தூரம் உண்மையானது என்பதை நான் அனுபவத்தால் பலதரம் உணர்ந்து கொண்டுள்ளேன். பொங்கல் நிகழ்ச்சியைச் சாட்டாக வைத்து என்னை எப்படியும் இறக்கி விடலாம் எனப் பலரும் முனைந்து கொண்டிருக்க, இறைவன் மோடியைச் சந்திக்க வைத்து என் மதிப்பைத் திடீரென உயர்த்தி இருக்கிறான். இதனை இறையருள் என்று சொல்லாமல் வேறு என்ன என்று சொல்வது? நண்பன் ஆறு.திருமுருகன் என்னோடு தொலைபேசியில் பேசுகிறபொழுது, 'அண்ணை! உங்களச் சிலபேர் படியால இறக்கப் பார்த்தாங்கள். ஆனால் கடவுள் உங்கள திடீரென்று லிப்டால ஏத்தி விட்டுட்டார்' என்றார்.

அயோத்தியாலயக் கும்பாபிஷேகத்தையொட்டி மோடி அவர்கள் பிரதமராய் அன்றி ஒரு பக்தனாய்க் கடுமையான விரதம் மேற்கொண்டார். பதினொரு நாட்கள் வெறுமனே இளநீர் மட்டுமே குடித்தும் வெறும் தரையில் படுத்தும் அவர் மேற்கொண்ட விரதம் பற்றி அங்குள்ளவர்கள் எல்லாம் வியந்து, வியந்து சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

அந்த விரத ஒழுங்கின் ஒரு பகுதியாக, இராமனால் அமைக்கப்பட்ட இராமேஸ்வர ஆலயத்தையும் வழிபடுவதற்காகவே மோடி தமிழ் நாட்டிற்கு வருகை தந்திருந்தார். அந்தப் பயண ஒழுங்கின் ஒரு பகுதியாகத் தான், மோடி அவர்கள் திருச்சியில் அமைந்துள்ள ஸ்ரீரங்கம் ஆலயத்திற்கும் வருகை தந்தார். அவ் ஆலயத்தில் அமைந்துள்ள ஓர் மண்டபத்தில்தான் கவிச்சக்கரவர்த்தி கம்பர் தனது இராமாயணத்தை அரங்கேற்றியதாகச் சொல்கிறார்கள். அதையறிந்த பிரதமர் அவர்கள் ரங்கநாதப் பெருமாளைச் சேவித்து விட்டு, அந்த மண்டபத்தையும் தான் காண வேண்டும் என்று பிரதமர் சொன்னாராம்.

அதற்கான ஒழுங்குகளை தமிழகப் பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர் அண்ணாமலை அவர்கள் டாக்டர் பிரியா அவர்களுடைய துணையுடன் வேகவேகமாகச் செய்திருக்கிறார். அவ் இருவரின் முடிவின்படி பேச்சாளர்களாக பேராசிரியர் தெ.ஞானசுந்தரமும், இலங்கையிலிருந்து நானும் அழைக்கப்பட்டோம். அது தவிரக் கம்பன் பாடல்கள் சிலவற்றைப் பாடுவதற்காக புகழ்பெற்ற பாடகர் சிக்கல் குருசரண் அவர்களும் அவர்களின் குழுவினரில் மூவருமாக நாலு பேர் அழைக்கப்பட்டிருந்தனர். மொத்தம் ஏழு பேர் மட்டும் தான் அன்றைய நிகழ்ச்சியில் கலந்து கொண்டோம்.

கம்ப காவியம் அரங்கேறிய கல் மண்டபத்தின் மையத்தில், பிரதமருக்கு ஓர் இருக்கை அமைக்கப்பட்டிருந்தது. அவருக்கு எதிர்ப்புறமாக இரு ஓரங்களிலும் போடப்பட்டிருந்த ஆசனங்களில் நானும் பேராசிரியரும் அமர்த்தப்பட்டோம். எங்கள் இருவருக்கும் நடுவில் பாடகர்களும் அவர்களது குழுவினர்களும் அமர்த்தப்பட்டனர். பேராசிரியருக்கு அருகில் நிகழ்ச்சி இணைப்பாளரான டாக்டர் பிரியா அமர்ந்திருந்தார்.



35 நிமிடங்களே மொத்தமாக எங்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்தது. முதலில் 'உலகம் யாவையும்' என்கின்ற கடவுள் வாழ்த்துப் பாடலை குருசரண் பாட அப் பாடலுக்கான பொருளைப் பிரியா அவர்கள் ஆங்கிலத்தில் எடுத்துச் சொன்னார். அதற்குப் பிறகு பேராசிரியர் ஞானசுந்தரம் அவர்கள் வான்மீகிக்கும் கம்பனுக்கும் உள்ள வேறுபாடுகள் பற்றி ஆங்கிலத்திலும் ஹிந்தியிலுமாக ஒரு சிறு உரையாற்றினார். அதைத் தொடர்ந்து மேலும் மூன்று கம்பன் பாடல்கள் பாடப்பட்டு அதற்கான விளக்கமும் சொல்லப்பட்டது. அதற்குப் பிறகு நான் பேசினேன்.

எப்போதுமே கேட்கிறவர்களின் மனநிலை அறிந்து பேசுவது தான் என் வழக்கம். தொடர்ந்த பயணத்தால் பிரதமர் அடைந்திருந்த களைப்பை அவரது முகம் தெளிவாய்க் காட்டியது. அதனாலும் நேரம் மிக அருமையாக இருந்ததாலும் மிகச் சுருக்கமாக ஒரு சில செய்திகளை மட்டுமே நான் சொல்ல நினைந்தேன்.

"பிரதமர் அவர்களே! நான் எனது தாய்மொழியும் எனக்குத் தெரிந்த ஒரே மொழியும், அண்மைக்காலமாக உங்களால் விரும்பப்பட்டு வரும் மொழியுமான தமிழ் மொழியிலேயே பேசப்போகிறேன். எனது கருத்தை இங்குள்ளவர்கள் உங்களுக்கு மொழி பெயர்த்துச் சொல்லுவார்கள் என நம்புகிறேன்.

வடக்கில் தாங்கள் இராமனுக்குக் கற்கோவில் அமைத்திருக்கும் இவ் வேளையில், தெற்கில் கம்பனால் இராமனுக்கு அமைக்கப்பட்ட சொற்கோவில் அரங்கேற்றப்பட்ட இந்த மண்டபத்திற்கு வருகை தந்ததன் மூலம் தாங்கள் கம்பனை மட்டுமல்லாமல், தமிழர்களையும் கௌரவித்திருக்கிறீர்கள். அதற்காக முதலில் உங்களுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தாங்கள் தற்போது செல்லும் இடமெல்லாம் ஏதோ ஒரு திருக்குறளைச் சொல்லி, வள்ளுவத்திற்கு மதிப்பை ஏற்படுத்தி வருகிறீர்கள். இன்று தங்களின் நேரம் மிக அருமையாக இருந்தபோதும் கம்பன் தன் காவியத்தை அரங்கேற்றிய இம் மண்டபத்திற்கு வருகை தந்ததன் மூலம் கம்பனுக்கும் மதிப்பை உண்டாக்கி இருக்கிறீர்கள். இனிப் பிரதமர் வந்த மண்டபம் இது என அறிந்து, ஆல யத்திற்கு வருவோர் எல்லாம் இக் கம்பன் மண்டபத்தையும் காண வந்துகுவியப் போகிறார்கள். அதற்காகவும் உங்களுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எங்களின் கம்பன், இராமனை



அறத்தின் வடிவாகவே படைத்தான். அறம் என்பது ஒரு நாட்டினர்க்கோ, ஒரு இனத்தினர்க்கோ, ஒரு மொழியினர்க்கோ, ஒரு மதத்தினர்க்கோ சொந்தமானதல்ல. அது மனித குலம் அனைத்திற்கும் பொதுவானது. அதனால் தான் அறத்தின் வடிவான இராமனை உலக மக்கள் எல்லோரும் போற்றுகிறார்கள். அந்த இராமனுக்குக் கோயில் எடுத்து எங்கள் எல்லோரையும் நீங்கள் மகிழ்வித்திருக்கிறீர்கள். அதற்காகவும் எங்களின் நன்றி உங்களுக்கு உரியதாகிறது.

மாண்புமிகு பிரதமர் அவர்களே! இராமாயணக் கதை அயோத்தியில் தொடங்கி கிட்கிந்தையைக் கடந்து இலங்கை வரை செல்கிறது. அதனால் தானோ என்னவோ, இந்தியாவின் வடக்கிலிருந்தும் தெற்கிலிருந்தும் மட்டுமல்லாமல், இலங்கையிலிருந்தும் ஒருவர் இங்கு வர வேண்டுமென நினைந்தே நிகழ்ச்சி அமைப்பாளர்கள் என்னை அங்கிருந்து அழைத்திருக்கிறார்கள். அதற்காக அவர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்".

இதுதான் நான் பேசியதன் சுருக்கமான சாராம்சம். அங்கிருந்த நேர நெருக்கடி, பிரதமருக்கு முன்னால் பேசுகிறோமே என்ற பதற்றம், எல்லாம் சேர்ந்து நான் நினைத்த விடயத்தைத் தெளிவாகச் சொல்ல விட்டதோ என்னவோ? தெரியவில்லை.

நான் பேசிய தமிழ் நிச்சயம் பிரதமருக்குப் புரிந்திருக்காது. ஆனாலும் என் முகபாவங்களை வைத்து நான் சொன்னதைப் புரிந்து கொண்டவர் போல இடையிடையே கைகுவித்து வணங்கியும், புன்னகை புரிந்தும் அவர் காட்டிய பிரதி பாவங்கள் என்னைப் பெரிதும் ஆச்சரியப்படுத்தின.

நிகழ்ச்சி முடிந்ததும் என் அருகில் வந்து எனது கைகளைப்பற்றி வணக்கம் செலுத்தினார். பின்னர் தானாகக் கேட்டு எங்கள் அனைவருடன் சேர்ந்து புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

முடிவாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். பிரதமர் மோடி பற்றி ஏற்கனவே கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனாலும் அவரை நேரில் கண்ட பிறகு, என் மனதில் ஏற்பட்ட ஒன்றை இங்கு சொல்லியே ஆக வேண்டும்.

அவரது ஆளுமை, அனைவரையும் அணைத்துச்செல்ல நினைக்கும் அவரது போக்கு, முடிவெடுத்தால் எவருக்கும் அசைந்து கொடுக்காத அவரது மன உறுதி, நமது பாரதத்தின் ஆணிவேர் மதமான இந்துசமயத்தின் மேல் அவர் வைத்திருக்கும் அசையாத பற்று, அதனைத் துணிவோடு வெளிப்படுத்தும் நிமிர்வு என இத்தகைய தகுதிகளைக் கொண்ட, பாரதத்திற்கு தலைமை தாங்கக்கூடிய வேறொருவர் இன்றைய நிலையில் அங்கு இருப்பார் என்று தோன்றவில்லை.

கம்பன் சொன்ன 'அவர் தலைவர்', இவரைத் தான் குறிக்கிறதோ? மோடி மேல் மோடி கொண்டார் வாரிதியார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/ஏழாலை புனித இசிதோர் றோ.க.த.க பாடசாலையின் அதிபர் திரு.சிவசாமி நல்லகுமார் அவர்களின் மணிவிழா சிறப்பு மலர்

## ஆசீர் செய்தி



ஏழாலை புனித இசிதோர் றோ.க.த.க பாடசாலையின் அதிபராகக் கடந்த ஒரு தசாப்த காலத்திற்கும் மேலாகப் பணியாற்றித் தனது அகவை அறுபதைப் பூர்த்தி செய்து புதியதோர் வாழ்வில் காலடி எடுத்து வைத்திருக்கும் திருவாளர் சிவசாமி நல்லகுமார் அவர்களுக்கு, ஏழாலை புனித இசிதோர் ஆலய மக்களின் பங்குத்தந்தை என்னும் வகையில் எல்லாம் வல்ல இறைவனின் பெயரால் ஆசீர் வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

இந்த வருடம் நூற்றி முப்பதாவது ஆண்டைக் கொண்டாடும் அளவிற்குப் பழம் பெருமை வாய்ந்த பாரம்பரியம் மிக்க இப்பாடசாலையில் இரண்டு தடவைகள், 01.06.2010 தொடக்கம் 27.04.2012 வரை முதல் தடவையும் 15.08.2012 தொடக்கம் 07.02.2024 வரை இரண்டாவது தடவையும் பணியாற்றியுள்ளார். 2012 இல் இருந்து இன்றுவரை 36 இல் இருந்து 90 ஆக மாணவர்களின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது. புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளும் 2012 இல் ஒரு மாணவனும் 2016 இல் ஒரு மாணவியும் 2018 இல் மூன்று மாணவர்களும் 2023 இல் ஒரு மாணவனும் வெட்டுப் புள்ளிக்கு மேல் பெறுமளவிற்கு இவரது காலத்திலேயே வரலாற்றுச் சாதனை நிகழ்ந்துள்ளது.

2005 இல் வெளியிடப்பட்ட புனித இசிதோர் ஆலய நூற்றாண்டுவிழா மலரின்படி 1894 இல் யா/புனித இசிதோர் றோ.க.த.க பாடசாலையை சின்னத்தம்பி என்பவரின் காணியில் அக்காலத்தில் கத்தோலிக்க பாடசாலைகளின் முகாமையாளராக இருந்த யாழ்ப்பாண றோ.க.மறைமாவட்ட ஆயர் பேரருட்பணி. ஹென்றி யூலனின் வழிகாட்டலில் திண்ணைப் பாடசாலையாக யாழ்.ஆயரின் அனுமதியுடன், பொன்னுச் சட்டம்பியார் என மக்களால் அன்பாக அழைக்கப்பட்ட திரு.பரமானந்தம் பொன்னம்பலம் ஆரம்பித்தார். இவருக்கு உதவியாக ஏழாலை தெற்கு சூராவத்தை திரு.தருமுச்சட்டம்பியார் ஆயரால் நியமிக்கப்பட்டார்.

பின்னர் இப்பாடசாலை வளர்ச்சியடைந்து ஆலய வளவிற்கு மாற்றப்பட்டது. பாடசாலையையும் 1896 இல் ஆரம்பிக்கப்பட்ட கொட்டில் ஆலயத்தையும் ஒன்றாக வைத்திருந்த இக்காணி, 1896 இல் பதிவு செய்யப்பட்டதோடு 1905 இல் சுண்ணக்கல் ஆலயத்திற்கான அடிக்கல்லும் தோலகட்டிப் பங்கின் கீழ் தெல்லிப்பளை, சுன்னாகம், உடுவில் வரை அடங்கியிருந்த இப்பிரதேசம் இருந்தபடியால், அச்சுவேலியின் புனித யேசேப்பு ஆலயப் பங்குத்தந்தை அருட்பணி. ஏனெஸ்ட் ஜென் அ.ம.தி. அவர்களால் இக்காணியில் நாட்டப்பட்டது. 1961.01.23 இல் அவ்வேளை இருந்த ஸ்ரீமாவோ அரசு இலங்கை முழுவதும் இருந்த பாடசாலைகளை எவ்வித நட்டஈடும் வழங்காமலும் சமயச் சூழலுக்கு முன்னுரிமை கொடாமலும் அரசுடைமையாக்கிய போது இப்பாடசலைக் காணியும் ஆலயக் காணியும் வேறு வேறாக்கப்பட்டு எல்லையிடப்பட்டு பாடசாலைக்கான வாசல் இடமாற்றம் செய்யப்பட்டது.

இவ்விதமாக இவ்வருடம் 130 ஆவது ஆண்டைக் கொண்டாடுகின்ற பழம் பெருமைமிக்க பாடசாலையில் கடந்த 12 வருடங்கள் பணியாற்றிக் கல்விப்பணியில் பல வரலாற்றுத் தடங்களைப் பதித்து இன்று பெருமகிழ்வோடும் பெருமதிப்போடும் 60 அகவை தாண்டிக் கால்பதிக்கும் இந்நேரத்தில், அதாவது மங்காத மாண்போடு மணி விழாக் காணும் இவ்வேளை, இவர் காலடி எடுத்து வைக்கும் புதியதோர் வாழ்வை "ஞானமே மனிதர்க்கு உண்மையான நரை திரை" (சாஞா 4:9) என்னும் இறை வார்த்தைக்கொப்ப ஞானத்துடனும் புத்திக்கூர்மையுடனும் விவேகத்துடனும் நுண்மதியுடனும் சுற்றம் சூழ்வோர் பயன்பெறும்படி வாழ ஆசீர் கூறுகின்றேன்.

**அருட்பணி, குளுஸ் யேசுதாஸ் அன்ரனி பாலா,**
**பங்குத் தந்தை, ஏழாலை.**



**திரு.சிவசாமி நல்லகுமார்**
**(B.Ed)**

## சேவை விபரம்

*ஆசிரியர்:*

03.01.2000–13.06.2001
யா/உடுவில் மல்வத்தை றோ.க.த.க பாடசாலை

14.06.2001–30.06.2003
யா/கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை

01.07.2003–30.05.2010
யா/உடுவில் மல்வத்தை றோ.க.த.க பாடசாலை

01.06.2010–27.04.2012
யா/ஏழாலை புனித இசிதோர் றோ.க.த.க பாடசாலை

30.04.2012–14.08.2012
வ/பட்டிக்குடியிருப்பு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை

*அதிபர்:*

15.08.2012–07.02.2024
யா/ஏழாலை புனித இசிதோர் றோ.க.த.க பாடசாலை

## வாழ்த்துச் செய்தி



தனது 60 ஆவது அகவையில் 24 வருடக் கல்விச் சேவையினை ஆற்றி ஓய்வு பெற்றுச் செல்லும் யா/ஏழாலை புனித இசிதோர் றோ.க.த.க பாடசாலை அதிபர் திரு.சிவசாமி நல்லகுமார் அவர்களை பாராட்டி வாழ்த்துச் செய்தியினை வழங்குவதையிட்டு பெருமகிழ்வு அடைகின்றேன்.

கடந்த 24 வருடங்களாக கல்விச் சேவையில் ஆசிரியராகவும் ஆளுமைமிக்க அதிபராகவும் மாணவர்களின் கல்வித் தேடலுக்கு உறுதுணையாகவும் வழிகாட்டியாகவும் சாதனைகள் பல அடைவதற்கு முன்னோடியாகவும் செயற்பட்டவராவார்.

சிறுகொட்டிலில் ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்பட்டு வந்த இப்பாடசாலையானது தற்போது தரம் 1 தொடக்கம் தரம் 5 வரையாக அண்ணளவாக 100 மாணவர்களைக் கொண்டு இயங்கி வருவதுடன் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையிலும் சிறந்த பெறுபேறுகளை வெளிப்படுத்தி வருகின்ற பெருமை இவரையே சாரும்.

இவரது சேவையை பாராட்டுவதுடன் ஓய்வுக்காலம் சிறப்பானதாக அமைந்து மென்மேலும் கல்விச் சமூகத்திற்கு பயன்தர வேண்டுமென்றும் அவர்தம் குடும்பத்தாருடன் சீரோடும் சிறப்போடும் நீண்டகாலம் வாழ இறைவனை வேண்டுவதுடன் மேலும் கல்விப் பணி தொடரவும் வாழ்த்துகின்றேன்.

**திரு.தி.ஜோண் குயின்ரஸ்,**
**மாகாணக்கல்விப்பணிப்பாளர்**
**வடக்கு மாகாணம்.**

## வாழ்த்துச் செய்தி



யா/ஏழாலை புனித இசிதோர் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் கடமை நிறைவேற்று அதிபராக இருந்து அப்பாடசாலையின் பெயர் துலங்க வைத்து ஓய்வுபெறும் திரு.சிவசாமி நல்லகுமார் அவர்களின் மணி விழாவையொட்டி வெளியிடப்படும் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகிறேன்.

தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விமாணி பட்டம் பெற்ற இவர் ஆசிரியராகப் பல்வேறு பாடசாலைகளை அலங்கரித்து, இந்தப் பாடசாலையில் கடமை நிறைவேற்ற அதிபர் பணியினைச் சிறப்பாகச் செய்துள்ளார். பாடசாலையின் மாணவ வளத்தினை 36 என்ற எண்ணிக்கையில் இருந்து 90 ஆக அதிகரித்துள்ளமை இவரது செயற்றிறனுக்கு எடுத்துக்காட்டாகும்.

அத்துடன் பெற்றோரின் நம்பிக்கையை வெல்லும் வகையில் புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெறும் மாணவர்களை உருவாக்கியுள்ளமையும் முக்கியமானதாகும். பாடசாலையின் பௌதீக வளத் தேவைகள் இவரது காலத்தில் நிறைவு செய்யப்பட்டுள்ளன. செயலூக்கம் மிக்க பாடசாலை முதல்வராக இருந்து இவர் யா/ஏழாலை புனித இசிதோர் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையை வழிநடத்தியுள்ளார்.

திரு.சிவசாமி நல்லகுமார் அவர்களது சேவையினை நயந்து பாடசாலைச் சமூகம் முன்னெடுக்கும் விழா சிறப்படைய வாழ்த்துகிறேன். அவரது கடந்த காலச் சேவைக்காக எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது ஓய்வுக்காலம் சிறக்க வாழ்த்துகிறேன்.

**திரு.க.ஜெ.பிறட்லி, வலயக் கல்விப் பணிப்பாளர்,**
**வலிகாமம் வலயக் கல்வி அலுவலகம்.**

## அர்ப்பணிப்பான சேவையாளன்



யா/ஏழாலைபுனித இசிதோர்றோ.க.த.க பாடசாலையின் அதிபர் திரு.சி.நல்லகுமார் அவர்களது சேவையினை மதிப்பளித்து வெளியிடப்படுகின்ற சேவை நலன் பாராட்டு விழா மலருக்காக வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

2010 ஆம் ஆண்டு முதல் இப்பாடசாலையின் வளர்ச்சிக்காக அயராது உழைத்து வருகிறார். பாடசாலையின் அபிவிருத்திக்கும் மாணவர்களின் கல்விச் செயற்பாட்டிற்கும் திரு.சி.நல்லகுமார் அவர்கள் ஆற்றிவரும் சேவை அளப்பரியது.

இவரது சேவைக்காலத்தில் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்ததுடன் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையிலும் மாணவர்களது சித்தி வீதமும் உயர்வடைந்தது. கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை முறையாக முகாமை செய்ததுடன் மாணவர்களது அறிவு, திறன், மனப்பாங்கு, ஆளிடைத் தொடர்புகள் என்பவற்றை விருத்தி செய்யும் செயற்றிட்டங்களையும் செயற்படுத்தி வெற்றி கண்டவர்.

மாணவரது இணைப்பாடவிதானச் செயற்பாடுகளுக்கு ஊக்கமளித்ததுடன் பாடசாலைச் சமூகத்துடனும் நல்லுறவைப் பேணிய பண்பாளராகவும் திகழ்கின்றார். தன்னலங் கருதாது பாடசாலை வளர்ச்சிக்குச் சேவையாற்றிய இவரது ஓய்வுக்காலம் சிறப்புற அமைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**திரு.சி.முரளிதரன்,**
**உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆரம்பக்கல்வி,**
**வலிகாமக் கல்வி வலயம்.**

## மணிவிழா நாயகனுக்கு மனமார்ந்த வாழ்த்துக்கள்



இருபத்தைந்தாண்டுகள் இடைவிடாத சேவை
ஓய்வில்லாமல் பணி செய்தீர்
ஓய்வெடுக்கும் காலமிது

அச்சுவேலியில் ஆரம்பக்கல்வியை கற்றீர்
பன்முக ஆளுமையை மகாஜனவில் பெற்றீர்
ஆசிரியராக, அதிபராக அரும்பெரும் சேவையாற்றி
நல்லகுமார் என்ற பெயருக்கேற்ப
நல்ல ஆசானாக போற்றப்பட்டீர்
சிறிய பாடசாலைகள் பலவற்றிலே
பெரிய பணிகள் பல செய்தே
பாடசாலையும் மாணவரும் உயர்வு பெற
உன்னத சேவை தந்தீர்
ஓய்வு காலமதில் உயர்வான வாழ்வுகண்டு
நோய்நொடியின்றி நலமாய் வாழவேண்டி
நல்வாழ்த்து கூறுகின்றேன் நலமாய் வாழ்கவென்றே.

**திரு.சோ.இராமநாதன்,**
**கோட்டக்கல்விப் பணிப்பாளர்,**
**உடுவில் கோட்டம்.**

## அதிபரின் வாழ்த்துச் செய்தி



ஏழு ஆலயங்கள் ஒருங்கே அமையப்பெற்ற எழில்மிகு ஏழாலைக் கிராமத்தின் கிழக்குப் பகுதியில் 1818 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டதே ஏழாலை புனித இசிதோர் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை. 200 வருடங்களைக் கடந்த வரலாற்றைக் கொண்ட இப்பாடசாலை காலத்திற்குக் காலம் பல்வேறு அதிபர்களால் நிர்வகிக்கப்பட்ட சிறந்த ஆரம்ப பாடசாலையாக வளர்ச்சி அடைந்து வருகின்றது. அந்த வகையில் தற்போதைய அதிபராக கடமையாற்றுகின்ற திரு.சிவசாமி நல்லகுமார் என்பவர் 01.06.2010 இல் இப்பாடசாலையைப் பொறுப்பேற்று இன்றுவரை மிகுந்த அர்ப்பணிப்புடன் சேவையாற்றி பாடசாலை வரலாற்றில் திருப்புமுனை ஒன்றை ஏற்படுத்தினார் என்றால் அது மிகையாகாது. இவரது காலத்தில் 36 ஆக இருந்த மாணவர் எண்ணிக்கை 90 வரை அதிகரித்தமை இதற்குச் சான்றாக அமைகின்றது. மேலும் ஆரம்பப் பாடசாலையின் அடைவுமட்டத்தை வெளிப்படுத்தும் தரம் 5 புலமைப் பரீட்சையில் 2012 இல் இருந்து இன்றுவரை மாணவர்கள் வெட்டுப்புள்ளியிற்கு மேல் சித்தி அடைகின்றமை இப்பாடசாலையின் வளர்ச்சிப் போக்கை காட்டுவதுடன் அதிபரின் அயராத உழைப்பையும் வெளிப்படுத்தி நிற்கின்றது.

வாண்மைத்துவம் மிக்க அதிபராகச் செயற்பட்டு பாடசாலையை வளர்ச்சி அடையச் செய்ததுடன் தனது ஆளுமையாலும் ஆற்றலாலும் அனைவரையும் ஒன்றிணைத்து ஓர் அணியில் செயற்பட்டமை அவரது வெற்றிக்குத் துணை நின்றது எனலாம். பாடசாலை ஆசிரியர்களுடனும் மாணவர்களுடனும் மிகவும் அன்பாகப் பழகி அவர்களின் உணர்வுகளை மதித்து கருத்துக்களிற்குச் செவி சாய்த்து சமூகத்தையும் இணைத்து அனைவரது மனங்களையும் வென்ற நல்ல மனம் கொண்ட நல்ல அதிபராக பெயருக்கு ஏற்ற வகையில் திகழ்ந்தார் என்பதை எனது அவதானிப்பின் ஊடாக உணர்ந்து கொண்டேன். இன்று கிராமப்புற பாடசாலைகள் எதிர்நோக்குகின்ற பெரிய பிரச்சினையாக அமைவது மாணவர் சேர்வு வீதம் குறைவாக காணப்படுகின்றமை. ஆனால் அதிபரின் சிறந்த செயற்பாட்டினால் இங்கு மாணவர் எண்ணிக்கை ஓரளவு உயர்வாக காணப்படுகின்றமை சிறப்பம்சமாகும்.

மாணவர் விரும்பி வரும் பாடசாலையாகவும் கல்வி மற்றும் இணைபாடவிதானச் செயற்பாடுகளில் முன்னேற்றம் அடைந்து வரும் பாடசாலையாகவும் இதனை மாற்ற 13 ஆண்டுகள் மகத்தான சேவை ஆற்றி இன்றுடன் ஓய்வு பெறும் இவர் தன் ஓய்வுக்காலத்தில் நோய் நொடியின்றி குடும்பத்தினருடன் இணைந்து மகிழ்வோடு வாழ வேண்டும் என்றும் கல்விப் புலத்தில் அவர் மென்மேலும் சேவைகள் ஆற்ற வேண்டும் எனவும் வாழ்த்தி இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**திருமதி.சந்திரலதா கஜேந்திரன்,**
**அதிபர்.**

## வாழ்த்துச் செய்தி



சிறந்த சாதனைகள் பலபடைத்தஅதிபராகவிளங்கும் திரு.சி.நல்லகுமார் அவர்கள் 60 ஆவது அகவையில் தடம்பதிக்கும் இவ்வேளையில் விழாநாயகனை வாழ்த்துவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

நான் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயின்ற காலம் முதல் அவருடனான தொடர்பு நீண்டு செல்வதையிட்டு பெருமையடைகின்றேன். அவரிடம் சிறந்த தலைமைத்துவத்துக் குரிய முக்கியமான பண்புகளை அவதானித்துள்ளேன். முதலாவதாக இயற்கையாகவே அவர் நேர்முகமான சிந்தனை கொண்டவர்.

இதனால் அவர் எடுத்த காரியங்களை சிறப்பாக செய்து முடித்ததுடன் மாணவர் களையும் ஆசிரியர்களையும் சிறந்த முறையில் ஊக்கப்படுத்தி வழிப்படுத்த முடிந்தது. அடுத்து சிறந்த விழுமியங்களைக் கொண்டவர். உன்னதமான முகாமைத்துவத்துக்கு மேன்மைத்தன்மை, நேர்மை, சமூகப் பொறுப்பு, சாதனை, பிறர்பொருளுக்கு ஆசைப்படாமை போன்ற உயர் விழு மியங்களை தனக்கெனக் கொண்டு, உறுதியாகப் பின்பற்றி பாடசாலையின் வினைத் திறனுக்கும் விளைதிறனுக்கும் தெளிவான நோக்குடன் செயற்பட்ட மகான் ஆவார்.

இத்தகைய சிறப்புக்களை உடைய எங்கள் அதிபர் இன்று மணி விழா நாயகனாக மகுடம் சூடுகிறார். தோற்றத்தில் இளமையும் தொழில் நிலையில் அனுபவத்தையும் செயற்பாட்டில் நேர்மையும் வாழ்வில் ஒழுக்கத்தையும் ஒருங்கே பெற்று அறுபது ஆண்டுகள் கடந்து அடுத்த தலை முறைக்கு முன்மாதிரியாக விளங்கும் எங்கள் அதிபரை பலமும் வளமும் ஆரோக்கியமும் பெற்று என்றும் மகிழ்வுடன் நூற்றாண்டு வாழ வாழ்த்துகின்றேன்.

**திரு.வ.துவாரகன், ஆசிரியர்,**
**தலைவர் ஆசிரியர் நலன்புரிக் கழகம்.**

**வாழ்த்துவோர்: பாடசாலைச் சமூகம், யா/ஏழாலை புனித இசிதோர் றோ.க.த.க பாடசாலை** (18917)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

# பட்டாசு தொழிற்சாலையில் பாரிய வெடி விபத்து

## அறுவர் பலி, 175 பேர் காயம்



(டில்லி)

இந்தியாவின் மத்தியப் பிரதேச மாநிலம் ஹர்தாவில் உள்ள பட்டாசு தொழிற்சாலையில் ஏற்பட்ட பாரிய வெடி விபத்தால் 11 பேர் உயிரிழந்துள்ளதோடு 175 பேர் காயமடைந்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தீ விபத்தானது அருகிலுள்ள பல கட்டடங்களுக்கும் பரவியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

விபத்தில் காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக அருகிலுள்ள வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும், அவர்களில் சிலரது நிலை கவலைக்கிடமாகவுள்ளதாகவும் அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

தீயணைப்பு வாகனங்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து தீயை கட்டுக்குள் கொண்டு வரும் பணியில் ஈடுபட்டுள்ளதுடன், மீட்புப் பணியும் நடைபெற்று வருகிறது.

குறித்த வெடிப்பு சம்பவத்துடன் தொடர்புடைய 3 சந்தேக நபரை கைது செய்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (நி-5-6)

# சிலியின் முன்னாள் ஜனாதிபதி விபத்தில் சிக்கி உயிரிழப்பு

(வோஷிங்டன்)


ஹெலிகொப்டர் விபத்தில் சிலியின் முன்னாள் ஜனாதிபதி செபாஸ்டியன் பினேரா உயிரிழந்துள்ளார்.

தனக்குச் சொந்தமான ஹெலிகொப்டரை நேற்று முன்தினம் அவர் இயக்கிச் சென்றுள்ள நிலையில், தெற்கு சிலியில் உள்ள ஏரியொன்றில் விழுந்து குறித்த ஹெலிகொப்டர் விபத்துக்குள்ளாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது குறித்த ஹெலிகொப்டரில் செபாஸ்டியனுடன் சேர்த்து 4 பேர் பயணித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து தகவல் அறிந்து சம்பவ இடத்துக்கு வருகை தந்த மீட்புப் படையினர், செபாஸ்டியனின் சடலத்தைக் கைப்பற்றியுள்ளதோடு, படுகாயங்களுக்குள்ளான ஏனைய மூவரையும் மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

74 வயதான செபாஸ்டியன் பினேரா இதுவரை இரண்டு முறை சிலியின் ஜனாதிபதியாகப் பதவி வகித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5-6)



# ரஷ்யாவுடனான ...

# போலந்தின் அறி...



(வார்சா)

ரஷ்யாவுடனான அமை... தயாராக இருப்பதாக... விளாடிசா கோனேக் ...

அண்மையில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் ரஷ்யா, போலந்து நாட்டின் மீது தாக்குதல்களை மேற்கொள்வது குறித்து கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

இதன் போது, நேட்டோ அமைப்பில் இணைவது குறித்த உக்ரைனின் விருப்பத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து ஆரம்பமான உக்ரைன் -ரஷ்யா இடையேயான போர் தற்போது போலந்து மீதான போர் அச் சுறுத்தலுக்கான வாய்ப்புகளை அதிகரித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

நாங்கள் எல்லா சூழ்நிலைகளுக்கும் தயாராக இருக்கிறோம். இதனை வெறும் பேச்சுக்காக மாத்திரம் சொல்லாமல், செயலிலும் காட்ட போலந்து இராணுவம் இறங்கியுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும், போர் அச்சுறுத்தலை எதிர்கொள்வதற்கு தயாராகும் உறுதியான நடவடிக்கைகளை ஏற்கனவே போலந்து தொடங்கியுள்ளதாகவும் அவர் கூறினார்.

பெரிய அளவிலான ஆயுதக் கொள்முதல் மிகவும் முக்கியமானதாக இருக்கின்றபோதிலும், ஒவ்வொரு இராணுவ வீரருக்கான தனிப்பட்ட ஆயுத தேவைகளை



யும், ஏனைய ப... தேவைகளையு...

# ஹமாஸ் அமைப்பின் தலைவர்களுக்கு கனடா பொருளாதார தடை விதிப்பு



(ஒட்டாவா)

ஹமாஸ் அமைப்பின் உயர்மட்ட தலைவர்களுக்கு எதிராக கனடா அரசாங்கம் பொருளாதார தடைகளை விதித்துள்ளது.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி தெற்கு இஸ்ரேல் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் நூற்றுக்கணக்கானவர்கள் உயிரிழந்தமை தொடர்பாக ஹமாஸ் மற்றும் பாலஸ்தீனிய இஸ்லாமிய ஜிஹாத் உயர் அதிகாரிகளைக் குறிவைத்து பொருளாதாரத் தடைகளை கனடா வெளியுறவு அமைச்சகம் அறிவித்துள்ளது.

இவ்வாறு பொருளாதார தடை விதிக்கப்பட்டவர்களில் ஹமாஸின் உயர்மட்ட தலைவர்கள் யாஹ்யா சின்வார் மற்றும் முகமது டெய்ப் ஆகியோர் அடங்குவர்.

நேற்று முன்தினம் வெளிவிவகார அமைச்சு வெளியிட்ட அறிக்கையில், "ஹமாஸ் மற்றும் அதன் துணை அமைப்புக்கள் பிராந்திய பாதுகாப்பிற்கு ஏற்படுத்தும் அச்சுறுத்தலை" குறிவைக்கும் வகையில் பொருளாதார தடைகள் விதிக்கப்பட்டுள்ளன என்று குறிப்பிட்டுள்ளது. (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போருக்கு தயார்

# ...விப்பால் பரபரப்பு

...அனைத்துப் போர் சூழ்நிலைகளையும் எதிர்கொள்ளத் ...பதாக போலந்து நாட்டின் பாதுகாப்பு அமைச்சர் ...னக் தெரிவித்தது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



...னைய பாதுகாப்பு ...வகளையும் நாங்கள் கவனத்தில் எடுத்துக் கொண்டுள்ளோம் என பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்தார்.

மேலும் அடுத்த "ஐந்து முதல் எட்டு ஆண்டுகளில்" ரஷ்யாவால் நேட்டோ மீது நிகழ்த்தப்படும் தாக்குதல்களை தவிர்க்க முடியாது என ஜேர்மனியின் பாதுகாப்பு அமைச்சர் போரிஸ் பிஸ்டோரியஸ் பகிர்ந்து கொண்ட கருத்துகளையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந் நிலையில், நேட்டோ ரஷ்யாவுடனான மோதல்களிற்கு தயாராகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(நி-5-6)

## பிரபல இசையமைப்பாளர் விஜய் ஆனந்த் காலமானார்

(டில்லி)

திரைப்பட இசையமைப்பாளர் விஜய் ஆனந்த் உடல் நலக் குறைவால் காலமான செய்தி திரையுலகினர் மத்தியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.



நடிகர் ரஜினிகாந்தின் 'நான் அடிமை இல்லை', 'நாணயம் இல்லாத நாணயம்', "காவலன் அவன் கோவலன்", "ராசாத்தி வரும் நாள்", "கயிறு" உள்ளிட்ட ஏராளமான படங்களுக்கு இசையமைத்தவர் விஜய் ஆனந்த். 71 வயதான இவர் உடல்நலக் குறைவால் சென்னையில் நேற்று முன்தினம் காலமானார்.

'ஒரு ஜீவன்தான் உன் பாடல்தான்" போன்ற பல ஹிட் பாடல்களை எண்பதுகளில் இசையமைத்துள்ளார். விசு இயக்கிய பெரும்பாலான படங்களுக்கு இவர்தான் இசையமைப்பாளராக இருந்துள்ளார். (நி-5-6)

## செங்கடலில் பிரித்தானிய கப்பல் மீது தாக்குதல்



(சனா)

பிரித்தானியாவிற்கு சொந்தமான கப்பலொன்று தாக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நேற்று முன்தினம் செங்கடல் வழியாக குறித்த கப்பல் பயணித்துக் கொண்டிருந்த போதே ஆளில்லா விமானம் மூலம் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

ஹெடெய்டாவிற்கு மேற்கே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது என பிரித்தானிய் இராணுவத்தின் கடல்வர்த்தகம் தொடர்பான அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த தாக்குதலில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை என்பதுடன் கப்பலின் ஜன்னல்களிற்கு சிறிய சேதம் ஏற்பட்டுள்ளது.

குறித்த கப்பல் தாக்கப்படுவதற்கு முன்னர் அந்தப் பகுதியில் சிறிய படகு ஒன்று காணப்பட்டதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இங்கிலாந்தின் தனியார் நிறுவனத்துக்கு சொந்தமான சரக்குக் கப்பல் மீதே இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதேவேளை இந்த தாக்குதல் சம்பவத்துக்கு எந்த குழுவும் உடனடியாக பொறுப்பேற்கவில்லை. (நி-5-6)

## தென்கொரியா - சவூதிக்கு இடையே புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்து

(ரியாத்)

நாட்டின் பாதுகாப்பை பலப்படுத்தும் நோக்கில் சவூதி அரேபியா தென்கொரியாவுடன் பாதுகாப்பு சம்பந்தமான புரிந்துணர்வு உடன் படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளது. இந்த புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு அமைய தென் கொரியா, சவூதிக்கான தனது ஆயுத விற்பனையை அதிகரிக்கலாம்.



அத்துடன் புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு அமைய ஆயுதங்கள் தொடர்பான ஆராய்ச்சி, அபிவிருத்தி, தயாரிப்பு உள்ளிட்ட விடயங்களிலும் இரு நாடுகளும் ஈடுபட முடியும்.

இந்த உடன்படிக்கை இரண்டு நாடுகளின் பாதுகாப்பு அமைச்சர்கள் முன்னிலையில் கடந்த திங்கட் கிழமை கைச்சாத்திடப்பட்டன.

வெளிநாடுகளுக்கு ஆயுதங்களை விற்பனை செய்ய பல நாடுகள் ஒன்றுடன் ஒன்று போட்டியிட்டு வரும் நிலையில், தென் கொரியாவும் ஆயுத விற்பனையில் முக்கியமான நாடாகமாற முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

கடந்த 2022 ஆம் ஆண்டில் மாத்திரம் தென்கொரியா 17 பில்லியன் டொலர் பெறுமதியான ஆயுதங்களை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்துள்ளது. மேலும் தென் கொரியா கடந்த ஒரு தசாப்த காலத்தில் மத்திய கிழக்கு நாடுகளுக்கான தனது ஆயுத விற்பனையை 10 மடங்காக அதிகரித்துள்ளது. (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லண்டனில் இடம்பெற்ற

# சுதந்திர தின எதிர்ப்பு போராட்டத்திற்கு அதிருப்தி வெளியிட்ட இலங்கை



(கொழும்பு)

பிரித்தானியாவின் லண்டனில் கடந்த 4ஆம் திகதி இலங்கையின் தேசிய சுதந்திர தினத்திற்கு எதிர்ப்பை வெளியிட்டு போராட்டம் முன்னெடுக்கப்பட்டமை தொடர்பில் இலங்கை அரசாங்கம் அதிருப்தி வெளியிட்டுள்ளது.

இராஜதந்திர ரீதியில் இந்தப் போராட்டம் தொடர்பில் அதிருப்தி வெளியிடப்பட்டுள்ளதாக இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

76 ஆம் சுதந்திர தின நிகழ்வுகளை எதிர்த்து தமிழ் புலம்பெயர் தரப்புக்கள் மேற்கொண்ட போராட்டம் அதிருப்தி அளிக்கும் வகையில் அமைந்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பிலான அதிருப்தி, லண்டனுக்கான இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தின் ஊடாக பிரித்தானிய அரசாங்கத்திற்கு வெளிப்படுத்தப்படும் என தெரிவித்தார்.

புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் கொடிகள் மற்றும் கறுப்பு கொடிகளை ஏந்தி சுதந்திர தினத்திற்கு எதிர்ப்பை வெளியிட்டு லண்டனில் போராட்டம் நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# இணைய பாதுகாப்புச் சட்டம் ஆட்சியை பலவீனப்படுத்தும்

## மாற்றுக் கொள்கைகளுக்கான மத்தியநிலையம்

(கொழும்பு)

சமீபத்தில் இயற்றப்பட்ட இணைய பாதுகாப்பு சட்டம் தொடர்பாக மாற்றுக் கொள்கைகளுக்கான மத்திய நிலையம் கடுமையான கவலைகளை வெளிப்படுத்தியுள்ளது.

குறிப்பாக இணையப் பாதுகாப்பு சட்ட வரைவு செயல்முறையைச் சுற்றியுள்ள இரகசியம் மற்றும் அதனை நிறைவேற்றுவதற்காக அவசர நோக்கம் குறித்தும் கேள்வியெழுப்பியுள்ளது.

மேலும் குறித்த சட்டம் தொடர்பான உயர்நீதிமன்றத்தின் திருத்தங்களை அரசாங்கம் முழுமையாக பின்பற்றத் தவறியதையும் மாற்றுக் கொள்கைகளுக்கான மத்திய நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது.

அரசியலமைப்பு பற்றிய கவலைகள் எழுப்பும் அதேநேரம் இது சட்டத்தின் ஆட்சியை பலவீனப்படுத்தும் என்றும் மாற்றுக் கொள்கைகளுக்கான மத்திய நிலையம் குறிப்பிட்டுள்ளது.

ஆகவே அதனை உடனடியாக இரத்து செய்து, உரிய வகையில் நிவர்த்தி செய்து சட்டத்தை நிறைவேற்றுமாறு கேட்டுக்கொண்டுள்ளது.(நி-5-6)

# கச்சதீவு திருவிழா ஏற்பாடுகள் மும்முரம்



(யாழ்ப்பாணம்)


கச்சதீவு திருவிழாவிற்காக ஏற்பாடுகளை இலங்கை கடற்படையினர் முழுவீச்சில் முன்னெடுத்து வருகின்றனர்.

வருடாந்த கச்சதீவு பெருந்திருவிழா எதிர்வரும் 23ஆம் திகதி மற்றும் 24ஆம் திகதிகளில் கச்சதீவில் நடைபெற உள்ளது.

பெருவிழாவின் பிரதான ஆராதனை யாழ்.மறைமாவட்ட ஆயர் அருட்தந்தை ஜஸ்டின் ஞானப்பிரகாசம் தலைமையில் நடைபெறவுள்ளது. அதனை முன்னிட்டு பக்தர்களுக்கான வசதிகளை இலங்கை கடற்படையினர் முன்னெடுத்து வருகின்றனர்.

சுகாதாரம் மற்றும் குடிநீர் வசதிகள், தற்காலிக தங்குமிடங்கள், இறங்குதுறைகள் மற்றும் மின்சார விநியோகத்தை உறுதி செய்தல் போன்ற வேலைகளை முன்னெடுத்துள்ளனர். (நி-5-6-315)

# இறந்த நிலையில் கரையொதுங்கிய ஆமைகள்



(கரணவாய்)

வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில் அண்மைக்கால மாக இறந்த நிலையில் ஆமைகள் கரையொ துங்கி வருகின்றன.

இந்நிலையில் கட்டைக்காட்டு கடற்கரையில் நேற்று முன்தினம் இறந்த நிலை யில் இரண்டு ஆமைகள் கரையொதுங்கியுள்ளன.

கடல் கொந்தளிப்பாக காணப்படுவதால் காயமடைந்த ஆமைகளே இவ்வாறு தொடர்ச்சியாக இறந்து தமது பிரதேசத்தில் அதிகளவு கரையொதுங்குவதாக அப்பகுதி மீனவர்கள் தெரிவித்துள்ளனர். (நி-5-6)

# பூப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பூப்பந்தாட்ட சங்கம் MSR.S EAST EAGLE SMASHERDS (UK) அனுசரணையுடன் இணைந்து நடத்தும் 5 ஆவது யாழ்.மாவட்ட சம்பியன் சுற்றுப்போட்டி எதிர்வரும் 17, 18, 23, 24 மற்றும் 25 ஆம் திகதிகளில் காலை 8.30 மணி முதல் கொக்குவில், அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் மற்றும் யாழ்.பல்கலைக்கழக உள்ளக அரங்கில் இடம்பெறவுள்ளது. (நி-5-6)

## இன்று ஒரு தகவல் 29



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# ஆடுகளின் அறிவுரை

ராமாயணத்திலே கடைசியிலே ராமருக்கு பட்டாபிசேகம் நடந்ததல்லோ. அதுக்கு பிறகு நடந்த ஒரு நிகழ்ச்சி இது.

ராமர் ஆட்சி பண்ணிக்கொண்டு இருந்தார்.

அப்போ கைகேயி அம்மா அவரை ஒரு நாள் பார்த்து கேட்டாங்களாம்.

பிறவிப் பெருங்கடலிலே விழுந்து நான் தவித்துக் கொண்டு இருக்கிறேன். உன்னுடைய உபதேசங்களை கேட்டு தான் நான் கரை சேர வேண்டும் என்றாராம்.

அதுக்கு ராமர் அம்மா கவலைப்படாதீங்க. நாளைக்கு லக்சுமணன் உங்களை அழைத்துக் கொண்டு போய் உபதேசம் பண்ணி வைப்பான் என்றார். தம்பி நீ நாளைக்கு காலையிலே ஒரு காரியம் செய். நம்ம கைகேயி அன்னையை பல்லக்கிலே சரயு நதிக்கரைக்கு அழைத்துக்கொண்டு போ. அங்கே ஆட்டு மந்தைகள் இருக்கும். ஒரு முகூர்த்த நேரம் நம்ம அம்மா அந்த ஆடுகள் கத்துகின்ற சத்தத்தை கேக்குற மாதிரி செய் என்றார்.

சரி என்று சொல்லி விட்டார் லட்சுமணன. அடுத்த நாள் காலையிலே அம்மாவை ஒரு பல்லக்கிலே ஏற்றினார். சரயு நதிக்கரைக்கு அழைத்துக்கொண்டு போனார். அங்கே ஒரு ஆட்டு மந்தைக்கு பக்கத்திலே பல்லக்கை இறக்கினார். அம்மா இறங்கி வெளியே வந்தாங்க.

அம்மா இந்த ஆடுகள் ஒலிக்கிற ஒலியை தாங்கள் ஒரு "முகூர்த்த நேரம் கேட்கணும் என்று ராமர் சொன்னார் அப்படி என்றார்.

கைகேயி அந்த ஆடுகள் போடுற சத்தத்தை கூர்ந்து கவனிக்க ஆரம்பித்தாங்க. அதல்லாம் மே மே என்று கத்திக்கொண்டு இருந்தது.

கொஞ்ச நேரத்தில் எல்லாம் கைகேயி முகத்தில ஒரு ஒளி தோன்றியது. அஞ்ஞானம் நீங்கி ஞானம் வந்தது போல இருந்தது. உடனே லட்சுமணணைப் பார்த்து குழந்தாய்! மெஞ்ஞானத்தை அடைவதற்கு ராமன் எனக்கு உதவி செய்து விட்டான். இனிமேல் நாங்கள் அரண்மனைக்கு திரும்பலாம் என்றார்.

மறுபடியும் பல்லக்கில் ஏறி அரண்மனையை வந்தடைந்தார்கள். வந்ததும் ராமர் அவர்களை பார்த்து அம்மா அந்த ஆடுகளின் ஒலியிலிருந்து நீங்கள் என்ன கற்றுக் கொண்டீர்கள் என்று கேட்டார்.

அதுக்கு அவங்க பதில் சொன்னாங்க.

நான் ஆடுகளின் ஒலியை கூர்ந்து கவனித்து கொண்டு இருந்தேன். அவை எல்லாம் மே மே என்று கத்திக் கொண்டு இருந்தன.

மே என்றால் எனது என்று அர்த்தம். நாங்கள் எல்லாம் எனது எனது என்று சொன்னதால தானே இப்படி ஆடுகளாக பிறந்தோம் என்று அந்த ஆடுகள் எனக்கு போதிச்ச மாதிரி உணர்ந்தேன். இனிமேல் எனது என்று எதையும் சொல்ல மாட்டேன் என்றார்.

ராமர் சொன்னார்!

அம்மா நான் என்கின்ற அகங்காரமும் எனது என்கின்ற மமகாரமும் தான் நம்மை படுகுழியில் தள்ளுகின்றன. தங்களுக்கு ஞானம் வந்து விட்டது. நான் தங்களுடைய மகன் என்பதனாலே உபதேசம் செய்யும் உரிமை எனக்கு கிடையாது. அதனாலே தான்இப்படி செய்தேன் என்றார் ராமர்.

பார்த்தீர்களா? ஆடுகள் போடும் சத்தத்திலிருந்து நாம் எவ்வளவு அர்த்தங்களை புரிந்து கொள்ள முடிகிறது. சில பேர் குழந்தைகள் போடும் சத்தத்திலிருந்து கூட சில அர்த்தத்தை புரிந்து கொள்வது உண்டு.

ஒருத்தர் தன்னுடைய நண்பர் வீட்டுக்கு போனார். அங்கே ஒரு குழந்தை சத்தம் போட்டு கத்திக் கொண்டு இருந்தது. உடனே அவர் அதை கூர்ந்து கவனித்தார் கைகேயி மாதிரி.

அப்போது சொன்னார். சார்! உங்க பையன் வருங்காலத்தில சண்டை போடுற ஒரு பெரிய வீரன் ஆகிவிடுவான் என்பதை இப்போதே என்னால புரிந்து கொள்ள முடியுது என்றார். எப்படி சொல்லுறீங்க என்று கேட்டார் அவர்.

கூர்ந்து கவனியுங்க சார். எப்படி கத்துறான் என்று. வருங்காலத்தில் அவனுக்கு என்ன தேவை என்பதை இப்பவே சொல்லுறான்.இப்பவே வாள் வாள் என்று கத்துறான் பாருங்க அப்படி என்றார் இவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதைபந்தாட்ட சுற்றுப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)


வடமராட்சி லீக் அனுமதியுடன் கொற்றாவத்தை றேஞ்சஸ் விளையாட்டு கழகம் நடத்தும் யாழ்.மாவட்ட ரீதியிலான அணிக்கு 9 நபர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி குறித்த கழக மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு வல்வை ஆதிசக்தி அணியை எதிர்த்து புத்தூர் வீனஸ் அணியும், பிற்பகல் 4.30 மணிக்கு வதிரி டயமன்ஸ் அணியை எதிர்த்து இருதய ஆண்டவர் அணியும் மோதவுள்ளன. (நி-5-6-90)

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் தெல்லிப்பளை நாமகள் விளையாட்டுக்கழகம் மாவட்ட ரீதியில் நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட யாழின் நாயகன் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி தெல்லிப்பளை நாமகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு அல்வாய் நண்பர்கள் அணியை எதிர்த்து காரைநகர் தோப்புக்காடு அணியும், பிற்பகல் 4.45 மணிக்கு அல்வாய் மனோகரா அணியை எதிர்த்து சென் நியூஸ்ரார் அணியும் மோதவுள்ளன. (நி-5-6-90)

# யாழில் டிப்பர் வாகனம் மீது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம்




(யாழ்ப்பாணம்)

யாழ்.புத்தூர் பகுதியில் மணல் ஏற்றி சென்ற டிப்பர் வாகனம் மீது, பொலிஸாரினால் துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டு மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சட்டவிரோத மணல் ஏற்றிய, டிப்பர் வாகனம் வேகமாக பயணிப்பதாக பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், புத்தூர் பகுதியில் வைத்து டிப்பர் வாகனத்தை வழிமறித்துள்ளனர்.

அதன்போது டிப்பர் சாரதி வாகனத்தை நிறுத்தாது சென்றமையால், வாகனத்தின் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டதையடுத்து டிப்பர் வாகனம் வீதியில் குடைசாய்ந்தது.

சட்டவிரோத மணல் மண்ணை ஏற்றி சென்றமையால், சாரதி வாகனத்தை நிறுத்தவில்லை என பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. அதேவேளை டிப்பர் வாகன சாரதி, உரிமையாளர் உள்ளிட்ட மூவர் கைது செய்யப்பட்டு, அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (நி-5-6-33)

# தேராவில் குள மக்களுக்கான தீர்வு தொடர்பில் கலந்துரையாடல்



(நெளுக்குளம்)

தேராவில் குளத்து நீரை வெளியேற்றி மக்களது வாழ்க்கை நிலையை சுமூகமாக ஏற்படுத்துவதற்கான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் சி.ஜெயக்காந்த் தலைமையில் இடம்பெற்றது.

ஏ-35 வீதியில் பாலத்தை அமைத்து வெள்ள நீரினை அகற்றுவது என்றும் அதற்காக பாலத்தை அமைப்பதற்கு 5.6 மில்லியன் ரூபா தேவை என கணக்கிடப்பட்டுள்ளது. அதனை வீதி அபிவிருத்தி அதிகார சபையினரின் நிதி ஒதுக்கீட்டில் தங்களுடைய பொறுப்பில் செய்து தருவதாக வாக்குறுதியளித்துள்ளதுடன் அதன் பணியை எதிர்வரும் திங்கட் கிழமை ஆரம்பிக்கவுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

அதேபோல் வாய்க்கால் வெட்டி அந்த வீதியை கடத்தி நீரினை வெளியேற்ற வேண்டும். அதற்கு 13.4 மில்லியன் ரூபா நிதி தேவை என கமநல உதவி ஆணையாளர் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டுள்ளது. அதற்குரிய நிதியினை உடனடியாக தேட முடியாமல் உள்ளது.

அப்பகுதியில் இருக்கின்ற தேக்கு மரங்களை மரக்கூட்டுத்தாபனத்தின் உதவியுடன் தேவைக்கேற்ப வெட்டி அகற்றுவதற்கும் , அங்குள்ள சிறு புதர்களை வனவள திணைக்களத்தின் அனுசரணையை பெற்று கிராம மக்களின் சிரமதானத்தின் மூலம் அகற்றுவதற்கும் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது என தெரிவித்தார். (நி-5-6-299)

# மூன்று பேக்கரிகள் மீது வழக்குத் தாக்கல்

(கண்டாவளை)

கிளிநொச்சி நகரில் உள்ள பேக்கரிகள் மற்றும் வர்த்தக நிலையங்களில் பாவனையாளர் அதிகார சபையினால் திடீர் சோதனை நடவடிக்கைகளை நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

பாணின் நிகர எடை தொடர்பில் விலை கட்டுப்பாட்டு பிரிவினர் திடீர் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது 450 கிராம் அளவிற்கு குறைவான எடைகளில் பாண் உற்பத்தி செய்து விற்பனை செய்தமை மற்றும் விற்பனைக்காக காட்சிப்படுத்திய மூன்று பேருக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (நி-5-6-315)

# எக்கோ நிபுணர் இன்மையால் நோயாளர்கள் பாதிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையில் எக்கோ வைத்திய நிபுணருக்கு வெற்றிடம் காணப்படுவதால் அப்பகுதி மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக நோயாளர்கள் எக்கோ பரிசோதனையை மேற்கொள்வதற்காக யாழ்ப்பாணம் அல்லது வவுனியா மருத்துவமனைக்கு செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் குறித்த விடயம் தொடர்பில் அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (நி-5-6-100-316)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 500 | 550 | 500 | 450 | 600 |
| உருளைக்கிழங்கு | 150 | 180 | 150 | 200 | 180 |
| பச்சைமிளகாய் | 1000 | 1200 | 1000 | 1200 | 1000 |
| தக்காளி | 750 | 700 | 800 | 500 | 665 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 140 | 150 | 160 | 120 |
| கோவா | 600 | 500 | 600 | 600 | 600 |
| கரட் | 800 | 1000 | 1300 | 1200 | 1350 |
| பூசணி | 220 | 240 | 200 | 300 | 255 |
| புடோல் | 250 | 300 | 300 | 300 | 240 |
| வாழைக்காய் | 250 | 250 | 200 | 300 | 250 |
| சின்ன வெங்காயம் | 280 | 360 | 300 | 320 | 400 |
| பெரிய வெங்காயம் | 360 | 350 | 350 | 400 | 450 |
| பாகற்காய் | 600 | 450 | 600 | 600 | 600 |
| வெண்டக்காய் | 500 | 500 | 300 | 500 | 430 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 140 | 200 | 150 |
| பயற்றங்காய் | 600 | 500 | 600 | 500 | 500 |
| லீக்ஸ் | 450 | 450 | 600 | 600 | 700 |
| பீற்றூட் | 450 | 300 | 450 | 400 | 600 |
| கறிமிளகாய் | 600 | 1000 | 600 | 1300 | 790 |
| முருங்கைக்காய் | 1800 | 1500 | 2000 | 2000 | 2000 |
| போஞ்சி | 450 | 350 | 450 | 600 | 400 |
| கத்தரிதம்புள்ள | 450 | 300 | 500 | 400 | — |
| கீரை - 1 பிடி | 80 | 100 | 80 | 100 | 60 |
| தேசிக்காய் | 200 | 300 | 250 | 200 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 90 | 80-110 | — |
| இராசவள்ளி | 450 | 400 | 400 | 500 | 600 |
| வெங்காயப்பூ | 250 | 500 | 300 | 350 | 270 |
| முள்ளங்கி | 150 | 150 | 250 | 300 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 80 | 80 | 140 |
| வல்லாரை | 80 | 50 | 50 | 80 | 80 |
| ஏரப்பலா | 100 | 100 | 80 | 200 | 100 |

# 21 இறங்கு துறைகள் புனரமைக்க வேண்டிய நிலையில் உள்ளன

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேசங்களில் உள்ள 21 இறங்கு துறைகளை ஆழப்படுத்தி புனரமைக்க வேண்டிய தேவை காணப்படுவதாக கடற்தொழில் நீரியல் வள திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தின் நாச்சிகுடா பூநகரி கண்டாவளை பச்சிலைப்பள்ளி ஆகிய கடற்றொழில் பரிசோதகர் பிரிவுகளில் 4 ஆயிரத்து 186 மீனவ குடும்பங்களைச் சேர்ந்த 16 ஆயிரத்து 931 அங்கத்தவர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

குறித்த பிரதேசங்களில் சுமார் 5 ஆயிரத்து 170 கடற்றொழிலாளர்கள் கடற்றொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடற்றொழில் உபகரணங்களையும் தொழிலுக்கு நாளாந்தம் கொண்டு செல்வதிலும் தொழிலுக்குச் சென்று திரும்புவதற்கும் ஏற்ற வகையில் மாவட்டத்தில் எந்த இறங்கு துறைகளும் இல்லாத நிலையில் கடற்றொழிலுக்கு சென்று வரும் மீனவர்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறித்த இறங்கு துறைகளை புனரமைத்து தருமாறு தொடர்ச்சியாக மீனவ சமூகங்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டு வருகின்ற நிலையிலும் இதுவரை குறித்த பகுதி இறங்கு துறைகள் புனரமைக்கப்படாத நிலை காணப்படுகின்றன.

இந் நிலையில் இறங்கு துறைகளை புனரமைப்பதற்கான மதிப்பீடுகள் செய்யப்பட்டு உரிய திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அதற்கான நிதி கிடைக்காமையினால் அவற்றை அபிவிருத்தி செய்ய முடியவில்லை எனவும் மாவட்ட உதவி பணிப்பாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5-6-315)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 400



புத்த பகவான் கடைசித் திரு அவதாரத்துக்கு முன்னால் வேறு பல அவதாரங்களில் தோன்றியதாக அறிந்திருப்பீர்கள். ஒரு சமயம் சிபிச் சக்கரவர்த்தியாக அவதரித்துக் கொடுமை நிறைந்த இந்த உலகத்தில் ஜீவகாருண்யத்தின் பெருமையை உணர்த்தினார். ஒரு சிறிய புறாவின் உயிரைக் காப்பாற்றும் பொருட்டுத் தமது திருமேனியில் சதையைத் துண்டு துண்டாக அவர் அரிந்து துலாக்கோலில் இட்டார்.

அந்தச் சிபிச் சக்கரவர்த்தியின் வம்சத்திலே வந்தவர்கள் என்று சோழ குலத்தவராகிய நீங்கள் சொல்லிக கொள்கிறீர்கள். சிபியின் வம்சத்திலே வந்த காரணம் பற்றிச் 'செம்பியன்' என்ற பட்டப்பெயரும் சூடிக் கொள்கிறீர்கள். ஆனால் இதுவரையில் புத்த சங்கத்தார் அதை நம்ப வில்லை. சோழ குலத்துப் புரோகிதர்கள் கட்டிய கதை என்று தான் எண்ணியிருந் தார்கள். இன்று தங்களுடைய அரும் பெரும் செயல் களைப் பார்த்த பிறகு, - சிபிச் சக்கரவர்த்தியின் பரம்பரையில் வந்தவர்கள் சோழர்கள் என்று ஒப்புக் கொள்ள வேண்டி வருகிறது.

புத்த பகவானுடைய பெருங் கருணையை மாயை காரணமாக இதுகாறும் சோழகுலம் மறந்திருந்தது. அந்தக் கருணை இன்றைய தினம் தங்கள் மீது ஆவிர்ப்பவித்திருக்கிறது. அதற்கான தேவ சூசகமும் கிடைத்திருக்கிறது. இதோ!" என்று கூறி அத்தியட்சக தேரோ பின்னால் திரும்பிப்பார்த்ததும், பிக்குக்கள் சிலர் பீடம் ஒன்றில் சாய்ந்து படுத்திருந்த மற்றொரு பிக்குவைப் பீடத்துடன் தூக்கிக் கொண்டு வந்தார்கள். அந்தப் பிக்குவின் உடம்பெல்லாம் இடைவிடாமல் நடுங்கிக் கொண்டிருந்தது. கைகள் வெடவெடவென்று நடுங்கின் கால்கள் நடுங்கின் உடம்பு நடுங்கிற்று் தலை ஆடிற்று பற்கள் கிட்டின் உதடுகள் துடித்தன் சிவந்த கண்களுக்கு மேலே புருவங்களும் அசைத்தன.

"இந்தப் பிக்/வின் பேரில் முப்பத்து முக்கோடி தேவர்களும் ஆவிர்ப்பவித்திருக்கிறார்கள். தேவர்கள் கருணை கூர்ந்து சொல்வதைக் கேட்டுக் கொள்ளுங்கள்!" என்றார் மகாதேரோ.

ஆவேசங் கொண்டிருந்த புத்த பிக்குவின் வாயிலிருந்து நடு நடுங்கிக் குளறிய குரலில் ஏதேதோ மொழிகள் அதிவிரைவில் வந்தன. அவர் பேசி நிறுத்தியதும் அத்தியட்சக குரு கூறினார். "முப்பத்து முக்கோடி தேவர்களும் தங்களை ஆசீர்வதிக்கிறார்கள்.

முற்காலத்தில் தேவானாம் பிரிய அசோகவர்த்தனர் பாரத பூமியை ஒரு குடையில் ஆண்டு, புத்த தர்மத்தை உலகமெல்லாம் பரப்பினார். அத்தகைய மகா சாம்ராஜ்யத்துக்குத் தாங்கள் அதிபதியாவீர்கள் என்று தேவர்கள் ஆசீர்வதிக்கிறார்கள். அசோகரைப் போல் தாங்களும் புத்த தர்மத்தை உலகில் பரப்ப வேண்டும் என்று விரும்புகிறார்கள். அசோகர் பாடலிபுத்திரச் சிம்மாசனத்தில் வீற்றிருந்து செய்த தர்மப் பெரும் பணிகளைத் தாங்கள் இந்தத் தொன்மை மிக்க அநுராதபுரத்தில் ஆரம்பித்து நடத்த வேண்டுமென்று கட்டளையிடுகிறார்கள். இளவரசே! தேவர்களுடைய கட்டளைக்குத் தங்கள் மறுமொழி என்ன?"

இதைக் கேட்டதும் இளவரசர், "மகா குரு! தேவர்கள் சக்தி வாய்ந்தவர்கள். அவர்கள் சித்தபடி நடத்திக் கொள்ளுவார்கள். ஆனால் அடியேனுக்கு இப்போது அவர்கள் இடும்பணி யாது என்று விளங்கவில்லையே?" என்றார்.

"அதை நானே தெரிவிக்கிறேன்" என்று அத்தியட்சக தேரோ கூறிச் சமிக்ஞை செய்ததும், ஆவேசம் வந்திருந்த பிக்குவை அப்பால் எடுத்துச் சென்றார்கள். பின்னர் பிக்குத் தலைவர் கூறினார்:- "இளவரசே, இதோ உங்கள் முன்னால் உள்ள சிங்காதனத்தைப் பாருங்கள், மணி மகுடத்தைப் பாருங்கள், செங்கோலையும் பாருங்கள்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## சிங்கத்தின் பங்கு



ஒரு வறட்சியான கால கட்டத்துல காட்டுல ஒரே பஞ்சம்.

அதனால நிறய மிருகங்களுக்கு வேட்டையாடி சாப்பிட உணவு எதுவும் கிடைக்கவே இல்ல.

அதனால காட்டு மிருகங்கள் ரொம்ப நாள் பசியோடவே இருந்துச்சுங்க.

அதனால ஒரு சிங்கமும் ஒரு நரியும் ஒரு ஓநாயும் சேர்ந்து வேட்டையாடலாம் னு முடிவு செஞ்சுச்சுங்க.

அதன்படி ஓநாய் ஒரு கழுதைய தொரத்திக்கிட்டு வந்துச்சு, நரி அந்த கழுதைய தப்பிக்க விடாம மறிச்சி நின்னுச்சு.

நடுவுல இருந்த சிங்கம் ஒரே அடி அடிச்சு அந்த கழுதைய கொன்னுடுச்சு.

ரொம்ப நாளைக்கு அப்புறம் வேட்டையாடி நல்ல உணவு கிடைக்க போற சந்தோஷத்துல மூணு மிருகங்களும் சாப்பிட உக்காந்துச்சுங்க.

ஓநாய் அந்த கழுதைய பிச்சு போட்டுச்சு, நரி அத மூணு பங்கா பிரிச்சிச்சு.

உடனே அந்த சிங்கம் முதல் பாகத்தை எடுத்து நான் இந்த காட்டுக்கே ராஜா எனக்கு அதனால இந்த பகுதி ராஜாங்கத்துக்குனு சொல்லி தின்னுடுச்சு.

அடுத்ததா இருந்த பகுதிய எடுத்து நான் இங்க இருக்குற எல்லா மிருகங்களை விடவும் பலசாலி அதனால இந்த பகுதியும் எனக்கும் என்னோட வீரத்துக்கும்னு சொல்லி அதையும் சாப்பிட்டுச்சு.

மூணாவதா இருந்த பகுதிய சாப்பிட போன சிங்கத்த பார்த்து ஓநாய் கேட்டுச்சு கூட்டு முயற்சியா வேட்டையாடுன கழுதைய நீங்க மட்டும் சாப்பிடுறீங்களேன்னு கேட்டுச்சு.

உடனே கோபமான சிங்கம் அந்த ஓநாய ஒரே அடி அடிச்சிடுச்சு, அத பார்த்துகிட்டு இருந்த நரிகிட்ட நீங்க எதுவும் எங்கிட்ட கேக்கணு மான்னு கேட்டுச்சு.

அதுக்கு அந்த நரி சொல்லுச்சு நிலைமைய புரிச்சிகிட்டு அமைதியா இருக்குறது ஒரு புத்திசாலித்தனமான விஷயம் அது என்கிட்ட இருக்குறதால தான் நான் இன்னும் உயிரோட இருக்கேன்.

அத புரிச்சிக்கத ஓநாய் அடிபட்டு கிடக்குனு சொல்லுச்சு, இத கேட்ட சிங்கம் இந்த நரி தன்னோட புத்திசாலித் தனத்தால தனக்கு ஆபத்து ஏற்படுத்தினாலும் ஏற்படுத்தும்னு நினைச்சி அந்த மூணா வது பங்க நரிக்கே கொடுத்துடுச்சு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் தனது மன சக்தியின் மூலம் எதையும் சாதிக்க முடியும், தூய பண்புகளால் மலையையும் நகர்த்த முடியும்.
– ஓர் அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தென்னைகளைக் காப்பாற்ற விரைந்து நடவடிக்கை எடுங்கள்

தென்னை மரங்களைத் தாக்கும் வெள்ளை ஈ தொற்று மீண்டும் யாழ்.மாவட்டத்தில் வேகமாகப் பரவி வருகிறது.

கடந்த வருடம் வெள்ளை ஈ தொற்றினால் தென்னை மரங்கள் அழிகின்ற அபாயத்தை நெருங்கிய போதிலும் தென்னைப் பயிர்ச் செய்கை சபை மேற்கொண்ட தடுப்பு நடவடிக்கைகளும் பொதுமக்கள் காட்டிய கரிசனையும் மழை பெய்த காரணத்தாலும் வெள்ளை ஈ அபாயத்திலிருந்து தென்னை மரங்கள் காப்பாற்றப்பட்டன.

ஆனால் தற்போது வெப்பமான சூழ்நிலை ஏற்பட்டுள்ள நிலையில் வெள்ளை ஈ தொற்று யாழ்.மாவட்டத்தில் அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணம், நல்லூர் ஆகிய பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் வேகமாகப் பரவி வருகிறது.

இதனால் தென்னை மரங்கள் அழிவுறுகின்ற பேராபத்து ஏற்பட்டுள்ளது.

இதுதவிர யாழ்ப்பாணம், நல்லூர் ஆகிய பிரதேசங்களில் பரவி வரும் வெள்ளை ஈ தொற்று வட மாகாணம் முழுவதிலும் பரவக்கூடிய அபாயம் உண்டென்பதும் இங்கு கவனிக்கத்தக்கது.

இவ்வாறான சூழ்நிலை ஏற்படுமாக இருந்தால், தென்னைச் செய்கையாளர்கள் மிக மோசமாகப் பாதிக்கப்படுவர்.

எனவே இதுவிடயத்தில் பொதுமக்கள் மத்தியில் கடும் பிரசாரம் மேற்கொண்டு விழிப்புணர்வை ஏற்படுத்துவது கட்டாயமானது.

உண்மை. தற்போது யாழ்.மாவட்டத்தில் குறிப்பிட்ட இடங்களில் வெள்ளை ஈ தொற்று கடுமையாகத் தாக்கி வருகின்ற போதிலும் அது தொடர்பில் பொதுமக்கள் எந்தவித கரிசனையும் காட்டுவதாகத் தெரியவில்லை.

கடந்த வருடம் வெள்ளை ஈ தொற்று ஏற்பட்டபோது அதனைக் கட்டுப்படுத்துவதில் பொதுமக்கள் ஆர்வம் காட்டியிருந்தனர்.

ஆனால் இப்போது தென்னை ஈக்களின் எச்சம்; தென்னை ஓலைகளில் விழுந்து பச்சை ஓலைகள் கறுப்பாகிப்போக, மாப்பொருளைத் தயாரிக்க முடியாத நிலைமை ஏற்பட்டு தென்னை மரங்கள் அழிவுறும் அபாயத்தை எட்டியுள்ளன.

பொதுவில் எங்கள் தமிழர் தாயகத்தில் ஏதோ ஓரளவேனும் மக்களின் வாழ்க்கைச் செலவைக் குறைப்பதில் தென்னைகளே அதிக பங்கு வகிக்கின்றன.

வீட்டு வளவில் நிற்கின்ற மூன்று நான்கு தென்னை, காய்ப்பதால் கடையில் தேங்காய் வாங்காமல் சீவியம் நடத்துகிறோம் என்ற ஆறுதல் பல வீடுகளில் உண்டு.

ஆனால் அதற்கும் உலை வைப்பது போல தென்னை ஈ தொற்று, வளம்தரும் எங்கள் தென்னைகளை அழித்து விடுமோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

அத்துடன் மேற்படி நோய்த்தொற்று பரவினால் என்ன செய்வது எனத் தென்னைச் செய்கையாளர்கள் ஏங்கிப் போயுள்ளனர்.

எனவே வடபகுதியை ஆக்கிரமித்து வரும் தென்னை ஈ தொற்றை விரைந்து கட்டுப்படுத்துகின்ற நடவடிக்கையை அனைவரும் ஒன்றிணைந்து மேற்கொள்வது கட்டாயமானதாகும்.

# தன்னிச்சையாக செயற்படும் அரசுக்கு எம்மால் தொடர்ந்தும் ஆதரவளிக்க முடியாது

## பிரதான எதிர்க்கட்சி திட்டவட்டம்

(கொழும்பு)

கடந்த காலங்களில் அரசாங்கம் தன்னிச்சையாக செயற்பட்டதால், ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்திற்கு ஆதரவளிக்காது என எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்துடன் கைகோர்க்குமாறு ஜனாதிபதி எதிர்க்கட்சிகளிடம் தொடர்ந்து வேண்டுகோள் விடுத்து வருகின்ற போதிலும் அரசாங்கம் எதிர்க்கட்சிகள் தொடர்பில் அக்கறை காட்டவில்லை என பாராளுமன்ற வளாகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அமைதியான போராட்டத்தின் மீது அரசாங்கம் தாக்குதல் நடத்தியதாகவும், பலவந்தமாக ஐக்கிய மக்கள் சக்தியின் ஆதரவைப் பெற முயற்சிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

நாங்கள் அரசாங்கத்திற்கு தொடர்ந்து ஆதரவளித்தோம். 21 ஆவது திருத்தம் போன்ற பல சட்டங்களை நிறைவேற்றுவதற்கு நாங்கள் ஆதரவளித்தோம். எனினும், அரசாங்கம் அண்மைக் காலத்தில் தன்னிச்சையாகச் செயற்பட்டது,

உச்ச நீதிமன்றத்தின் பரிந்துரைகளுக்கு இணங்காமல் ஒன்லைன் பாதுகாப்பு சட்டமூலத்தையும் அரசாங்கம் நிறைவேற்றியுள்ளது. அங்கு சட்டமூலத்தை நிறைவேற்றும் போது 11 SC பரிந்துரைகள் பின்பற்றப்படவில்லை. பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான பரவலாக்கப்பட்ட வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு இந்த முறை எதிர்க்கட்சி எம்.பி.க்களுக்கு வழங்கப்படவில்லை,

ஜனாதிபதியின் கொள்கை பிரகடனத்தின் போது ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர்கள் சபையில் இருந்து வெளிநடப்பு செய்தது திடீரென எடுக்கப்பட்ட முடிவு அல்ல எனவும் இது நன்கு திட்டமிடப்பட்ட முடிவு எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கட்சித் தீர்மானத்தை மீறி சபையில் தங்கியிருந்த பல பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி நடவடிக்கை எடுக்குமா என்ற கேள்விக்கு பதிலளித்த கிரியெல்ல, அவர்களுக்கு உரிமை உள்ளதால் அவர்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாது என்றார்.

நாங்கள் ஒரு ஜனநாயகக் கட்சி, அவர்கள் தங்கள் சொந்த தீர்மானத்தை எடுக்க முடியும், என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

# மக்கள் நலன்சார் திட்டங்களை தொடர்ந்து நடைமுறைப்படுத்துவோம்

## சஜித் பிரேமதாச தெரிவிப்பு

(கொழும்பு)

வங்குரோத்து நாட்டில் நாட்டை ஆளும் அரசாங்கத்தால் பாடசாலைகளுக்கு கணினிகளைக் கூட வழங்க முடியாதுள்ளது. மக்கள் சார் எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி இந்தப் பணியை வெற்றிகரமாக செய்து வருகிறது.

இது போன்ற பல திட்டங்களை எதிர்க்கட்சி அமுல்படுத்தும் போது, வங்குரோத்து நிலையில் உள்ள நாட்டிலும் இலஞ்சம், ஊழல், மோசடி, கப்பம், மோசடிகள் நாளுக்கு நாள் அரங்கேறி வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் கருத்துரைத்த அவர்,

மனித இம்யூனோகுளோபுலின் உள்ளிட்ட பல தரமற்ற மருந்துகளை மக்களுக்கு வழங்கியதால் பலரது வாழ்க்கை பாதிக்கப்பட்டது. இந்த மருந்துகளில் இருந்து சுகாதார அமைச்சர் உள்ளிட்ட பல அதிகாரிகள் பெருமளவு தொகையை கொமிஸனாக பெற்றுள்ளனர்.

விவசாயிகள், மீனவர்கள், தொழில் முனைவோர்கள், அரச அதிகாரிகளுக்கு வேறு வழியின்றி இருக்கும் போது, திருடர்கள் கூட்டம் காலம் காலமாக திருடி நாட்டையே அழித்து வருகிறது.

ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் இந்த பொருளாதாரக் கொலையாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு, அவர்கள் திருடிய வளங்கள் நாட்டுக்கு மீளப் பெற்றுக் கொண்டு, கல்வி மற்றும் சுகாதாரத்தில் முதலீடு செய்யப்படும்.

அமைச்சர்களாக அமைச்சுகளின் ஊடக பல்வேறு துறைகளில் அபிவிருத்திகளை முன்னெடுத்தாலும், எதிர்க்கட்சித் தலைவராகவோ, எதிர்க்கட்சி அரசியல் கட்சியாகவோ மக்களுக்கு சேவை செய்வது இதுவே முதல் தடவை. இது மக்கள் கோரிய முறைமை மாற்றத்தின் ஓர் வடிவம் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

# சுற்றாடல் அமைச்சு ஜனாதிபதியின் கீழ்

## வர்த்தமானி வெளியீடு

(கொழும்பு)

சுற்றாடல் அமைச்சர் பதவியை ஜனாதிபதியின் கீழ் வைத்திருக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பிரதமருடன் கலந்தாலோசித்ததன் பின்னர் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதியின் உத்தரவுக்கமைய இது தொடர்பான விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை, நிகழ்நிலை பாதுகாப்பு சட்டத்தை பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டுவருவதற்கான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலும் ஜனாதிபதி செயலகத்தால் வெளியிடப்பட்டுள்ளது. (ம-7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை **வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை யாழ். பிரதேசத்தில்** சண்டிலிப்பாய்-சீரணி சந்தி எனும் இடத்தில் மின்சாரம் தடைப்படும்.

# பாடசாலைக்கு கெஹலியவின் நாமம் சூட்டியமை தவறு

## ஆசிரியர் சங்கம் கடுங்கண்டனம்

(கொழும்பு)

கல்வி அமைச்சின் சுற்றறிக்கையை மீறி, பாடசாலை ஒன்றுக்கு முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் பெயர் வைக்கப்பட்டுள்ளதாகவும் அதனை உடனடியாக நீக்குமாறு இலங்கை ஆசிரியர் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

நேற்று கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் இதனை தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் கருத்து வெளியிட்ட அவர்,

கண்டி மாவட்டத்தின் குண்டகசாலை பிரதேசத்தில் உள்ள பாடசாலைக்கு முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் பெயர் வைக்கப்பட்டுள்ளது.

அந்த பெயரை உடனடியாக நீக்க வேண்டும்.

கல்வி அமைச்சின் சுற்றறிக்கையை மீறி இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

1996ஆம் ஆண்டு கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் உயிருடன் உள்ள ஒருவரின் பெயரை பாடசாலைக்கு பெயரிட முடியாது.

ஆனால் முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல சமூகத்திற்கு தவறான ஒரு முன்னுதாரணம்.

அதனை உடனடியாக நீக்குங்கள். குறிப்பாக உயிருடன் இருக்கும் ஒருவரின் பெயரை பாடசாலைகளுக்கு வைப்பதற்கு எதிராக அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஜோசப் ஸ்டாலின் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்
## முதலிரு மேற்கத்தய ஆட்சியாளர் காலகட்டம் - பகுதி-III



கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

18

சுண்டிக்குழிப் பகுதியிலேயே போர்த்துக்கேயப் படைகளிடம் இருந்து முதலாவது தாக்குதல் நடத்தப்பட்டது. எனினும், போர்த் துக்கேயர் பெரும் இழப்புக்களுடன் பின்வாங்கினர்.

போர்த்துக்கேயரைப் பொறுத்த வரை, ஒல்லாந்தரின் தாக்குதலில் இருந்து யாழ்ப்பாணத்தைக் காத் துக்கொள்வதற்கான ஆளணிகள் போதுமானதாக இருக்கவில்லை. ஆயுதங்களுக்கும், அவற்றுக்கான வெடிமருந்துகளுக்கும் பற்றாக் குறை நிலவியது. பின்வாங்கிய போர்த்துக்கேயர், கிழக்கு எல்லை யில் இருந்த குறுக்குத் தெருவில் நிலையெடுத்து மூன்று நாட்கள் காவல் இருந்தனர்.

ஒல்லாந்தர் நகரத்தின் கிழக்கு எல்லை அடைந் தபோது மீண்டும் போர்த்துக்கேயர் அவர்களைத் தாக்கினர். ஆனாலும், ஒல்லாந்த ரின் வலுவான பீரங்கித் தாக்கு தல்களுக்கு ஈடு கொடுக்க முடியா மல், ஒவ்வொரு தெருவாகப் பின் வாங்கி, இறுதியாகக் கோட்டைக்கு அண்மையில் இருந்த கடைசித் தெருவில் நிலை கொண்டனர்.

நான்கு நாட்களின் பின்னர் அப்பகுதிக்கு வந்த ஒல்லாந்தப் படைகள் குறித்த நிலையைப் பக்கவாட்டில் இருந்து தாக்கின. நிலைகுலைந்த போர்த்துக்கேயப் படைகள் இரவோடிரவாகக் கோட் டைக்குள் புகுந்துகொண்டனர். யாழ்ப்பாண நகரத்தில் வாழ்ந்த போர்த்துக்கேயக் குடியேறிகளும் குடும்பங்களுடன் ஏற்கெனவே கோட்டைக்குள் தஞ்சமடைந்திருந் தனர்.

கோட்டை மக்களால் நிரம்பி வழிந்தது. கோட்டைக்குள் ஆளு னர் மாளிகை, வைத்தியசாலை, பிரான்சிஸ்க சபையின் துறவிமடம், தேவாலயம் என்பனவே குறிப்பி டத்தக்க கட்டிடங்களாக இருந்தன. மக்கள், தேவாலயத்துக்குள் நெருக் கமாக இருந்தனர்.

இந்தியாவில் இருந்த போர்த் துக்கேயரின் நிலைகளில் இருந்து படையுதவிகள் வருவதைத் தடுப்ப தற்காக ஊர்காவற்றுறைக்கு அரு கில் இருந்த கடற் கோட்டையையும் ஒல்லாந்தப் படைகள் தாக்கி அங் கிருந்த போர்த்துக்கேயப் படை களைச் சரணடையச் செய்தன.

யாழ்ப்பாணக் கோட்டை மதில் கள் வலுவானவையாக இருந்தா லும், ஒல்லாந்தப் படைகளிடம் வெடி மருந்துகள் போதிய அளவு இல் லாததாலும், உயிரிழப்புக்களைத் தவிர்ப்பதற்காகவும் கோட்டை மதில்களை உடைத்து உட்புகு வதில்லை என்னும் முடிவு எடுக் கப்பட்டது. கோட்டையைச் சுற்றி முற்றுகை இடுவதன் மூலம் நெருக் கடி கொடுத்துப் போர்த்துக்கேயப் படையினரைச் சரணடையச் செய் யும் உத்தியை ஒல்லாந்தர் நடை முறைப்படுத்தினர். முற்றுகை மிக வும் கடுமையாக மூன்றரை மாதங் கள் நீடித்தது.

வெளியில் இருந்த தாக்குதல் நிலைகளில் இருந்து கடுமையான பீரங்கித் தாக்குதல்களை ஒல்லாந் தர் நடத்தியதால், கோட்டைக்குள் இருந்த பலர் இறந்தனர். இந்த நேரத்தில் ஒல்லாந்தர், போர்த்துக் கேயப் படைகளைச் சில நிபந் தனைகளுடன் சரணடையுமாறு செய்தியனுப்பினர்.

நிலைமையை உணர்ந்துகொண்ட போர்த்துக்கேயப் படையினர் சரண டைவதற்கு முடிவு செய்தனர். 1658 யூன் 21 ஆம் தேதி கோட்டையின் தென்கிழக்குக் கொத்தளத்தின் மேல் வெள்ளைக் கொடியை அவர்கள் பறக்கவிட்டனர். யூன் 24 ஆம் தேதி, சரணடைவு ஒப்பந்தப்படி, போர்த்துக் கேயப் படையினர், தமது ஆயுதங் களோடும், கொடிகளோடும், முரசு ஒலித்தபடி, ஒரு பீரங்கியுடன் கோட் டையை விட்டு வெளியேறினர்.

போர்த்துக்கேயர் தமக்குச் சொந்தமான பொன், வெள்ளி, பெறுமதியான அசையக் கூடிய சொத்துக்கள் போன்றவற்றைத் தம்முடன் எடுத் துச் செல்ல முடியாது என்றும் அவ ற்றை ஒல்லாந்தரிடமே கையளிக்க வேண்டும் என்றும் நிபந்தனை இருந்தது.

மதிப்புடன் நடத்தப்படுவர் என உறுதி அளிக்கப்பட்டிருந்தும், எல் லோரையும் வரிசையாக வர வைத்து, ஆடைகளைக் களைந்து சோதனையிட்டதுடன், உடைகள், தொப்பி உட்பட எல்லாவற்றையும் ஒல்லாந்தர் கவர்ந்துகொண்டதா கவும், பெண்களையும் கூட இது போன்ற சோதனைகளுக்கு உள் ளாக்கி அவர்கள் அவமரியாதை செய்யப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

போர்த்துக்கேயர் அனைவரை யும் கப்பல்களில் ஏற்றி ஒல்லாந் தரின் கட்டுப்பாட்டில் இருந்த பத்தே வியாவுக்கு (இன்றைய ஜக்கார்த்தா) அழைத்துச் சென்று அங்கே போர்க் கைதிகளாக அடைத்து வைத்தி ருந்தனர்.

இப்போரின் முடிவில் யாழ்ப்பாண இராச்சியம் ஒல்லாந்தரின் கைக்கு மாறியது. இவர்கள் 1796 வரை 138 ஆண்டுகள் யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்தனர். யாழ்ப்பாண அரசைக் கைப்பற்றிய போர்த்துக்கேயர் அதைத் தனியான அலகாகவே நிர்வாகம் செய்தது போலவே, ஒல்லாந்தரும் யாழ்ப்பாண அரசுக்கு உட்பட்டிருந்த பகுதிகளைத் தனி யாகவே நிர்வாகம் செய்தனர்.

### யாழ்ப்பாண ஒல்லாந்து இலட்சனை

இந்த டச்சுக்காலத்து (ஒல்லாந்து) இலட்சனையின் தமிழ் விளக்கம் யாதெனில்இது யாழ்ப்பாணப் பிர தேசத்தின் முக்கிய உள்நாட்டு வருவாயைத் தரக்கூடிய பனைமரம் என்பதாகும். ஒரு தமிழ்ப்பாடலின் படி இந்த மரத்தின் மூலம் 801 வகை யான பயன்பாடுகள் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்விலட் சணையில் பொருந தியிருக்கும் தலைப்பாகை, கொழு ம்புப் பிரதே சத்துக்கு ( கோட்டை இராச்சியம்) அடுத்து யாழ்ப்பாணப் பிரதேசம் காலணித்துவ ஆட்சியில் முக்கிய மானதொரு இடத்தை வகித்திருப் பதைக் குறிக்கின்றது. இவ்விலட் சணையின் பகுதிகள் எப்போது அறிமுகப்படுப்படுத்தப் பட்டது என்ற விளக்கம் அறியப்பட வில்லை. இவ் விலட்சணை 1717-1720 காலப்பகு தியில் பதியப்பட்ட எழுத்துப் பிரதியில் எடுக்கப்பட்டதாக இணையத்தில் கூறப்பட்டுள்ளது.



யாழ்ப்பாணப்பட்டினத்தில் ஒல்லாந்தரின் குடியேற்றத்திற்கா இலட்சனை

### ஒல்லாந்தர் காலத்தில் யாழ்ப்பாணப்பட்டினத்தின் காணி நிர்வாகமும் படமாக்கலும்

போர்த்துக்கேயர் இலங்கையில் தம் ஆட்சியின்போது இலங்கையர் களின் பரம்பரையான பரிபாலன முறைகளை பெரிதும் மாற்றாது நிர்வாகத்தைக் கைக்கொண்டனர். போர்த்துக்கேயரின் ஆட்சியிக் காலத் தில் யாழ்ப்பாணம் அதற்கு முன்னி ருந்த வலிகாமம், தென்மராட்சி, வடமராட்சி, பச்சிலைப்பள்ளி என நான்கு பிரிவுகளாகவே இருந்தது குறிப்பிடத்தக்கது. இதைவிட தீவு களை உள்ளடக்கிய ஒரு பிரிவும் இருந்தது. போர்த்துக்கேயருக் குப்பின் இலங்கையை ஆட்சிசெய்த ஒல் லாந்தரும் இம் முறையையே நடை முறைப்படுத்தினர்.

அதன்பின் ஆட்சிசெய்த ஆங்கி லேயரும் ஆரம்பத்தில் இம் முறை யையே நடைமுறைப்படுத்தியது குறிப்பிடத்தக்கதாகும். இந் நிர்வாக முறைமையில் பிதேசத்திற்கு பிரதேசம் சிறிது வித்தியாசம் காணப்பட்டாலும் நாடு முழுவதும் இம் முறைமை பெருமளவு ஒத்தி ருந்தது குறிப்பிடத்தக்கது.

ஒல்லாந்தர் காலத்தில்மாகா ணம் என்னும் சொல் ஒரு சிறிய பிரதே சத்தை குறிப்பதாகவும் இருந்தது. யாழ்ப்பாணப்பட்டினத் தில் வலி காமம், தென்மராட்சி, வடமராட்சி, பச்சிலைப்பள்ளி ஆகிய நான்கு மாகாணங்களும் தீவுகளும் இருந்தன. ஒல்லாந்தர் தமது காலத்தில் நிர்வாகத்தை திறம்படச் செய் வதற்கு குறிப்பிட்ட இடங்களை வரையறுத்து படத் தயாரிப்பிலும் ஈடுபட் டனர்.

போர்த்துக்கேயர்யாழ்ப் பாணத்தை 33 கோவில் பற்றுக்களாகப் பிரித்தி ருந்தனர். (குறிப்பு:- சில நூல்களில் 32 கோவிற் பற்றுக்கள் என்றே கூறப் பட்டுள்ளன.) அவ்வாறே ஆட்சியைக் கைப்பற் றிய ஒல்லாந்தரும் யாழ்ப்பாண த்தை 33 கோவில் பற்றுக்களா கப்பிரித்து (வலிகாமம் மாகாணம் - 14 கோவில் பற்றுக்கள், தென மராட்சி மாகாணம் - 5 கோவில் பற் றுக்கள், வடமராட்சி மாகாணம் - 3 கோவில் பற்றுக்கள், பச்சிலைப் பள்ளி மாகாணம் - 4 கோவில் பற்றுக்கள் மற் தீவுகள் - 7 கோவில் பற்றுக்கள்) ஆலயங் களைத் திருத்தியும் புதிய ஆல யங்களைக் கட்டியும் ஒவ்வொரு ஆலயத்திற்கும் தமது மத குரு மாரை அல்லது சட்டம்பியார் என்ப வர்களை நியமித்து ஞாயிற்றுக் கிழமைகளில் ஆராதனைகளை நடாத்திக் கிறிஸ்தவ மத போதனை களைக் கூறி தமது ஆட்சியை மேற்கொண்டிருந்தனர்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத்தில்...

கோடியில் தஞ்சமடைந்துள்ளனர்.

வவுனியா மாவட்டம் நெடுங்குழி பகுதியில் வசித்து வந்த ஒரே குடும்பத்தை சேர்ந்த மொத்தமாக 5 பேர் நேற்று முன்தினம் மாலை மன்னாரில் புறப்பட்டு நேற்று அதிகாலை தனுஸ்கோடியை சென்றடைந்துள்ளனர்.

இந்த பயணத்தை மேற்கொள்வதற்காக படகோன்றுக்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயை வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ம-7)

# தும்புத் தொழிற்...

குறித்த சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோணாவில் பகுதியில் உள்ள தும்பு உற்பத்தி தொழிற்சாலையில் ஏற்பட்ட மின்னொழுக்கினால் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

தீ பரவியமையால் தும்பு மற்றும் மின் உபகரணங்கள் அனைத்தும் எரிந்துள்ளது.

தண்ணீர் பவுசர் மற்றும் அயலவர்களின் உதவியுடன் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

35 இலட்சம் பெறுமதியான பொருட்கள் நாசமானதாக தெரிவிக்கப்பட்டது.

இரண்டு தடவைகள் மின் இணைப்பு வயரில் சேதாரம் ஏற்பட்ட நிலையில் அதனை இரண்டு தடவைகள் மின்சார சபையினர் வந்து அறுந்த வயறை முடிந்தே சென்றனர்.

அத்துடன் அப்பகுதியில் ஏற்பட்ட மின்னொழுக்கு காரணமாகவே தும்பு தொழிற்சாலை எரிந்து நாசமாகி உள்ளதாக குற்றம் சாட்டப்பட்டது.

குறித்த சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றும் பதிவு செய்யப்பட்டுள்ளது. (ம-7,315)

# நிஷாந்தவின்...

தொடர்பில் விரிவான விசாரணைகளை நடத்துமாறும் சனத் நிஷாந்தவின் மனைவி குற்றப் புலனாய்வு திணைக்களத்தினரிடம் முறைப்பாடு அளித்துள்ளார்.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் மனைவி தற்போது தங்கியுள்ள இல்லத்திற்குச் சென்று குற்றப் புலனாய்வு திணைக்களத்தினர் வாக்குமூலம் பெற்றுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்போது விபத்து இடம்பெற்ற விதம் மற்றும் சாரதியின் நடத்தைகள் தொடர்பிலும் சிக்கல் நிலை காணப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி, தமது கணவரின் மரணம் தொடர்பில் உரிய விசாரணைகள் மேற்கொள்ளுமாறு குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளிடம் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (ம-7)

# பாராளுமன்ற...

கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சபையில் இருந்து வெளியேறினாலும், ஐக்கிய மக்கள் சக்தி ஊடாக பாராளுமன்றத்திற்கு தெரிவான ராஜித சேனாரத்ன, பாட்டலி சம்பிக்க ரணவக்க, ஃபீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, இஷாக் ரஹ்மான், A.H.M. பௌஸி, சுயாதீன உறுப்பினராக செயற்படும் குமார வெல்கம ஆகியோர் தொடர்ந்தும் சபையில் இருந்தனர்.

ஐக்கிய மக்கள் சக்தியுடன் கூட்டணி அமைத்துள்ள பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்கு கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்றைய சபை நடவடிக்கைகளில் கலந்துகொள்ளவில்லை.

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க, பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் ஆகியோர் வெளிநாடு சென்றுள்ள நிலையில், கலாநிதி ஹரினி அமரசூரிய ஜனாதிபதி உரையாற்றியபோது சபையில் பிரசன்னமாகியிருந்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களில் சார்ள்ஸ் நிர்மலநாதன் மற்றும் தவராசா கலையரசன் ஆகியோர் மாத்திரமே சபையில் இருந்தனர்.

மேலும் விக்னேஸ்வரன் எம்.பியும் சபை நடவடிக்கையில் கலந்து கொண்டார். (ம-7)

# 20 கிலோ...

இவ்வருட நிவாரணத்தின் மூலம் 24 இலட்சம் பேருக்கு நன்மைகளை வழங்க எதிர்பார்க்கப்படுவதாகவும் இதன்மூலம் நாட்டின் மிகக் குறைந்த மட்டத்தில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடியும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

வரலாற்றில் இவ்வளவு பெரிய தொகை மானியம் வழங்கப்படவில்லை என்றும் ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டார். (ம-7)

# பேருந்து...

முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மகளிர் மற்றும் சிறுவர் பணியகத்திற்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் ரேணுகா ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

இதற்கமைய இரகசியமான முறையில் கமரா பொருத்தப்பட்ட சிவில் உடை அணிந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் சேவைகளில் ஈடு படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் மற்றும் பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் ஆகியோரின் ஆலோசனைக்கு அமைய இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன் பெண்களுக்கு பொதுப் போக்குவரத்துகளில் இடையூறு ஏற்படுத்துவோர் தொடர்பில் அறிவிப்பதற்கு 109 எனும் அவசர இலக்கமும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. (ம-7)

# ஜனாதி...

சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்ற ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடன உரையின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க உட்பட அவரது குழுவினர் ஜனாதிபதியின் முழுமையான ஆசீர்வாதத்துடன் தான் இந்தியாவுக்கு அரசமுறை பயணத்தை மேற்கொண்டுள்ளார்கள். இவர்களுக்குத் தேவையான சகல வசதிகளையும் வழங்குமாறு இந்தியாவில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகருக்கு ஆலோசனை வழங்கியுள்ளோம்.

இந்திய உருளைக்கிழங்குகளை இலங்கையில் விற்பனை செய்தவர்களைக் கொலை செய்ய வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியினர் கடந்த காலங்களில் பிரசாரங்களை முன்னெடுத்தனர். இந்திய எதிர்ப்பு கொள்கைகளைத் தொடர்ந்து 60 ஆயிரம் பேர் உயிரிழக்கும் நிலை ஏற்பட்டது. நாடும் பாரிய விளைவுகளை எதிர்கொண்டது.

மக்கள் விடுதலை முன்னணியினர் இந்திய எதிர்ப்பு கொள்கையிலிருந்து விடுபட்டு நடைமுறைக்கு ஏற்றாற்போல் செயற்பட முனைவது வரவேற்கத்தக்கது. மக்கள் விடுதலை முன்னணியின் மாற்றம் மகிழ்வுக்குரியது என்றார். (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

லக்கி 7 VIP
திகதி 2024.02.07
சீட்டிழுப்பு இலக்கம் 0209
X 4 9 3 4 6 5 X

தன நிதானய
திகதி - 2024.02.07
சீட்டிழுப்பு இலக்கம் - 1413
Q 07 13 21 48 Q
10361

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3625
சீட்டிழுப்பு திகதி 07.02.2024
K 04 07 42 63
K
65796

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.02.07
சீட்டிழுப்பு இலக்கம் 0692
கடகம் 40 46 49 57 கடகம்
42314 26

மஹஜன சம்பத
திகதி 2024/02/07
சீட்டிழுப்பு இலக்கம் 5383
W 3 2 0 3 3 6

மெகா பவர்
திகதி 07/02/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1731
M 13 10 13 30 64
63797

உத்தியோகபூர்வ முடிவுகள்
07.02.2024 வெற்றி வாரம் 091
C 1 1 9 1 0 6
57710
28,495,836.00

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2357 வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2024.02.07 தினம் புதன்கிழமை
24 29 52 56 G
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 71,243,151.20
59152

சனிதா
திகதி 2024.02.07 வெற்றி வாரம் 4518
18 50 62 67 T
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 51,481,622.00
24566

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4069 வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2024.02.07 தினம் புதன்கிழமை
11 36 53 60 சிம்மம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,990,643.20
347224

L 26 06 07 38 59
1533
07.02.2024
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 502,984,296.20

ஜயோதா Jayoda
திகதி 2024.02.07 வெற்றி வாரம் 1998 வர்ணம் மஞ்சள்
33 37 49 57 T
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 21,856,149.60
21280

அட கோடிபதி ADA KOTIPATHI
புதன்கிழமை
வெற்றி வாரம் : 2183
சீட்டிழுப்பு திகதி : 2024.02.07
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 89,342,066.40
54 56 71 72 A
149755

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (18916)

076 825 7716 (ஆகாஸ்)


## மின்சாரசபை ஊழியர்கள்...

கொழும்பில் அமைந்துள்ள மின்சாரசபைக்கு முன்பாக நேற்று பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இலங்கை மின்சாரசபையின் ஊழியர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றினை முன்னெடுத்திருந்தனர்.

62 மின்சார சபை ஊழியர்களை பணிநீக்கம் செய்தமை சில அதிகாரிகளை பலவந்தமாக இடமாற்றம் செய்தமை, மின்பட்டியலில் விலைகள் அதிகரிக்கப்பட்டமை, சம்பள முரண்பாடு உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்னிலைப்படுத்தியே இந்த போராட்டம் இடம்பெற்றது.

மேலும் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் அடக்குமுறைகளை உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தோர் வலியுறுத்தினர்.

பதாகைகளை ஏந்தியும், கோஷமெழுப்பியும் போராட்டக்காரர்கள் தங்களின் எதிர்ப்பினை இதன்போது வெளிப்படுத்தியிருந்தனர். (ம-7)


## வீடு வாடகைக்கு

வலிகாமம் மேற்கு சித்தங்கேணி பண்டத்தரிப்பு பிரதான வீதிக்கு அருகில் நல்ல சூழலில் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :

077 367 1062 (18921)

## விற்பனைக்கு

8 அடி நீளமான வேலித்தூண்
அரியும் இரும்பு அச்சும் 80' x 10'
நீளமுள்ள கோழிக்கூடும்
(நிலக்கூடு)
விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :

077 699 8683 (18927)


## மரண அறிவித்தல்

### பஞ்சலிங்கம் ரேணுவதி



தோற்றம் : 1946.01.10 | மறைவு : 2024.02.07

இணுவில் மேற்கு, இணுவில் கே.கே.எஸ் வீதியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட பஞ்சலிங்கம் ரேணுவதி அவர்கள் நேற்று (07.02.2024) புதன்கிழமை காலை பரமானந்தவல்லி அம்மனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவகுரு -ஞானத்தின் மூத்த புதல்வியும் காலஞ்சென்ற செல்லையா பஞ்சலிங்கத்தின் அன்பு மனைவியும் அஜந்தனின் அன்புத் தாயாரும் சந்திராவதி, தேவராஜா, செல்வராஜா, புஷ்பவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் கணேசராஜா, துஷ்யந்தி, மதுராவின் அன்பு மாமியாரும் ரிஷிகேஷன், சாயிகௌசல்யா, வைஷாலி, பார்த்தன் ஆகியோரின் பாசமிகு அன்பு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை வெள்ளிக்கிழமை (09.02.2024) 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

*தகவல் :- குடும்பத்தினர்*

(18934, 18929) தொ.பே : +94 (21) 205 4403, +94 (76) 201 8768


## தேவை

புடவைக் கடைக்கு அனுபவம் உள்ள பெண்கள் வேலைக்குத் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
இடம் - கொக்குவில்.

தொடர்புகளுக்கு :

077 351 4774 (18931)

V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-8302)

## புதிய பிரிவுகள் ஆரம்பம்

வங்கியியல் கற்கை நெறிகள்
Banking Courses
DBF & HDBF (10.02.2024)
( IBSL நிறுவனத்தின் மறுசீரமைக்கப்பட்ட பாடவிதானம் )

கணக்காளர் கற்கை நெறிகள்
Chartered Accounting Courses
Business level - I,II (10.02.2024)


தொழிற்துறைக் கணக்காளர் ஆவதற்கு
aat [ Sri Lanka]
(AA1 - 10.02.2024)
G.C.E.O/L பெறுபேற்றினை எதிர்பார்த்திருப்பவர்களும் கற்கலாம்,
(AA2, AA3 -24.02.2024]
G.C.E. A/L பெறுபேற்றினை எதிர்பார்த்திருப்பவர்களும் கற்கலாம்.

Certificate Course in English

Further Details:
Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna.
(C-8228)

0212223382 | 0212229149
0774405917


## மரண அறிவித்தல்



### சின்னத்தம்பி ஜெகராசசிங்கம்

கச்சாய், பாலாவி, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி ஜெகராசசிங்கம் அவர்கள் 06.02.2024 அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - மீனாட்சி தம்பதியினரின் அருமை மருமகனும் காலஞ்சென்ற ஜெகதீஸ்வரியின் அன்புக் கணவரும் கவிதாசனின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான சிந்தாமணி, பரமேஸ்வரி மற்றும் அமரசிங்கம், கனகசிங்கம், இராசசிங்கம், காலஞ்சென்ற குணசிங்கம் மற்றும் கைலாயபிள்ளை, விஜயா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, சற்குணம் மற்றும் மனோன்மணி காலஞ்சென்ற மகாலட்சுமி மற்றும் பரமேஸ்வரி, பாஸ்கரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஜதுஷாவின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (09.02.2024) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் ஆனைக்கோட்டை கல்லுண்டாய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*தகவல்:*
குடும்பத்தினர்
077 730 5913

சோமசுந்தரம் வீதி,
ஆனைக்கோட்டை.
(C-8301)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.02.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.